


# நம்பிக்கையின் வீடு

நம்பிக்கை - 2 வீடு - 3

"தேவனை
நம்பியிருக்கிறவனோ
தேசத்தை
சுதந்தரிப்பான்"

இது நம்பிக்கையின் வெளியீடு
ஜூலை - ஓகஸ்ட் - செப்டம்பர் 2012

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஆசிரியரிடமிருந்து...

என்றும் என் அன்புக்குரியவர்களே!

உங்கள் அனைவருக்கும் ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தில் என் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

எமது ஆறாவது வெளியீடான "நம்பிக்கையின் வீடு" சஞ்சிகையின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் அளவில்லா மகிழ்ச்சியடைகின்றேன். நம் வாழ்வில் பலவகையான நம்பிக்கைகளைக் கற்றுக் கொண்டிருக்கிறோம். இது நமது மூதாதையர் மூலமாக நமக்குள் வந்தவையாகும். நமது தேசத்தில் வாழ்ந்த போது ஏதாவது ஒரு விடயத்தைப் பேசிக்கொண்டிருக்கும் போது பல்லி மேலிருந்து ச்..ச்..ச்.. என்று சத்தமிடும் போது பார்...பார்... பல்லிகூட சொல்லிற்று என்று அதை உறுதிப்படுத்துவார்கள். இல்லையென்றால் ஒரு கோவில் மணி அடித்தால் சரியான நேரத்தில் மணியடித்தது நல்ல சகுனம் என்பார்கள். இப்படியாக பல நம்பிக்கைகள் மனித வாழ்வில் புரையோடிப்போய் இருக்கிறது.

இன்று நாம் வாழும் தேசத்தில் பல்லி வீடுகளில் இல்லை. இப்போ எந்தப் பல்லி சாஸ்த்திரம் சொல்கிறது? எங்கே கோவில் மணி கேட்கிறது? இங்கே வாழும் நாம் வாழவில்லையா? பல்லி தனக்கு ஆகாரம் (பூச்சி) கிடைத்து விட்டது என்ற சந்தோஷத்தில் சத்தமிடுகிறது. நமது தேசத்தில் கோவிலில் உள்ள ஒழுங்கின்படி மணியை உரிய நேரத்தில் ஒலிக்கச் செய்கிறார்கள். அவைகளை நாம் நல்ல சகுனம் எனப் பார்ப்பது எவ்வளவு மூடநம்பிக்கை என சிந்தித்துப் பாருங்கள்! ஒரு பழமொழி இப்படியாக இருக்கிறது "சாஸ்த்திரம் சொல்லும் பல்லி கூழ்ப்பானைக்குள் விழுந்த கதை" என்பதாக. அதாவது அதற்குத் தன் வாழ்வின் நிலை எதுவென்று தெரியாது அதை ஏன் நம்ப வேண்டும். சுவரிலோ, வீட்டின் வளையிலோ ஓடித்திரியும் பல்லி தன் பிடி தவறி கீழே தற்செயலாக விழும்போது அது ஒரு மனிதனின் உடலின் மேல் விழுந்தால் அதைக்குறித்து பலன் அறிய முற்படும் நமது மூட நம்பிக்கை இதுபோன்ற எவ்வளவோ மூட நம்பிக்கைகள் மனிதனுக்குள் குடிகொண்டிருக்கிறது. இதற்கு அவன் பல காரணங்களை நியாயப்படுத்த முனைகிறான்.

சில சமயங்களில் சிலர் வெளியே கிளம்பும் போது வீட்டில் இருப்பவர் யாரோ ஒருவர் தும்மினால் உடனே இனிப் போகிற காரியம் விளங்காது என்று போவதை நிறுத்தி விடுகிறார்கள். இப்படியாகப் பலவிதமான நம்பிக்கைகள் மனிதனை ஆட்கொண்டுள்ளது. நமது வழிகளை, நம்பிக்கைகளை ஆராய்ந்து பாருங்கள். நீ இறை நம்பிக்கை உடையவனா(ளா)க வாழ்வாயானால் உன்னை உலகத்தில் படைத்த அந்த தேவன் உன்னை வழிநடத்துவார். பரிசுத்த வேதாகமத்தில் சங்கீதம் 139:16 ல் "என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது". என்று எழுதப்பட்டுள்ளது. இவ்விதமாக மனிதனின் பிறப்பை அறிந்த, உன்னைப் பிறப்பித்த தேவன் உன்னை வழிநடத்த, பாதுகாக்க வல்லவர் என்பதை மறந்து போகாதே.

ஆகவே நம்மை ஆட்கொள்ளும் பலவிதமான மூட நம்பிக்கைகளிலிருந்து வெளியே நாம் வரவேண்டும் என்பதற்காகவும், நாம் ஆரோக்கியமாகவும், நல்வழியில் வாழ்பவர்களாகவும் இருக்கவேண்டும் என்ற நோக்கிலேயே இச்சஞ்சிகை வெளிவருகின்றது. வாசியுங்கள், பயன்பெறுங்கள்.

ஸ்ரீதரன் ஜெயராஜா
ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்

"இறைச்சுடர்"
ஸ்ரீதரன் ஜெயராஜா

வெளியீட்டுக் குழு
சுயாதீன மெதடிஸ்த
தமிழ் திருச்சபை

41-3045 Southcreek Rd
Mississauga, Ont
L4X 2X6

தொடர்புகளுக்கு
(905) 232 – 3910
(416) 697 – 1321

Email
fmtchurch@gmail.com

## உள்ளே....

ஆரோக்கிய வாழ்வு

படித்ததில் பிடித்தவை

சமய கண்ணோட்டம்

சிந்தனைக்குச் சில...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆரோக்கிய வாழ்வு

சென்ற இதழ் தொடர்ச்சி

## குணமாக்குதலின் வழிகளும் முறைகளும்:

அ) சுவிசேஷ குணமளித்தல்

இது சுவிசேஷங்களை பிரசங்கிப்பதைத் தொடரும் குணப்படுத்தும் ஊழியமாகும். விசுவாசிப்பவர்களை எப்பொழுதும் தொடரும் என்று இயேசுவானவர் வாக்களித்த ஐந்து அடையாளங்களில் இதுவும் ஒன்றாகும். (மாற்கு16:17,18)ல் "விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார்" .இந்த வகையான குணப்படுத்துதல் ஏற்படுவதற்கு அநேக காரியங்கள் தேவைப்படுகிறது.

1- சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்:

இந்த வாக்குத்தத்தத்தை முந்திய கட்டளை (மாற்கு 16:5)ல் "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிகளுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்பதே. நாம் சுவிசேஷ ஊழியத்தை நடத்த வேண்டும் என்று இது நமக்குக் கூறுகிறது. நாம் புதிய இடங்களுக்குச் சென்று மன மாற்றம் அடையாதவர்களுக்கு சுவிசேஷத்தை பிரகடனப்படுத்த வேண்டும்.

பவுல் இந்தக் கட்டளையைப் பின்பற்றினார். மற்றொருவர் இட்ட அஸ்திபாரத்தின் மேல் கட்டாமல் கிறிஸ்து இன்னும் அறியப்படாத இடங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதை அவர் தெரிந்து கொண்டார். (ரோமர் 5:20) "மேலும் அவருடைய செய்தியை அறியாதிருந்தவர்கள் காண்பார்களென்றும், கேள்விப்படாதிருந்தவர்கள் உணர்ந்துகொள்வார்கள் என்றும் எழுதியிருக்கிறபடியே", என்ற வசனத்தின்பயனாக அவரது ஊழியம் ரோமர் 15:18ன் படியாக "அற்புத அடையாளங்களின் பலத்தினாலும், தேவ ஆவியின் பலத்தினாலும்...", அவர் ஊழியம் பெருகியது, தேவனால் அங்கிகரிக்கப்பட்டது. இதன் விளைவாக புறஜாதியார் ரோமர் 15:18ன் படியாக "வார்த்தையினாலும் செய்கையினாலும்" கீழ்ப்படியும்படி ஆக்கப்பட்டனர்.

2- சரீர சுகப்படுத்தலைப் பிரகடனப்படுத்துங்கள்:

புதிய ஏற்பாட்டுச் சூழ்நிலையில் சுவிசேஷத்தைப் பிரகடனப்படுத்துதல், சரீர சுகமளித்தல் நித்திய இரட்சிப்பின் நம்பிக்கை இவற்றை வலியுறுத்துவதாகும்.

இயேசுவானவருடைய ஊழியத்தின் ஒரு பெரும்பகுதி சுகவீனருக்கும், நோயாளிகளுக்கும் ஊழியம் செய்வதையே எடுத்துக் கொண்டது. அவர்கள் அவரண்டை திரள் கூட்டமாக வந்தார்கள் சிலதருணங்களில், "பிணியாளிகள் எல்லோரையும் சொஸ்தமாக்கினார்" என்று (மத்தேயு8:16)ல் சொல்லப்பட்டுள்ளது.

அந்தப்பிரகாரமாக, திரள் கூட்டமான நோயுற்ற மக்கள் அப்போஸ்தலர்களண்டை வந்தனர். பேதுரு சுகவீனரைக் கடந்து சென்றபோது அவரது நிழல் அவர்கள் மீது விழுந்து குணப்படுத்துதலையும், விடுதலையையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வந்தது. (அப்போ5:15,16) "பிணியாளிகளைப் படுக்கைகளின் மேலும் கட்டில்களின்மேலும் கிடத்தி, பேதுரு நடந்துபோகையில் அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர்மேல் படும்படிக்கு, அவர்களை வெளியே வீதிகளில் கொண்டுவந்து வைத்தார்கள். சுற்றுப்பட்டணங்களிலுமிருந்து திரளான ஜனங்கள் பிணியாளிகளையும் அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் எருசலேமுக்குக் கொண்டுவந்தார்கள்; அவர்களெல்லாரும் குணமாக்கப்பட்டார்கள்.

அநேக அதிசயங்களும், அடையாளங்களும்,அற்புதங்களும் அப்போஸ்தலர்களால் செய்யப்பட்டன (அப்போ5:12) "அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்கு உள்ளே செய்யப்பட்டது. எல்லாரும் ஒருமனப்பட்டுச் சாலோமோனுடைய மண்டபத்தில் இருந்தார்கள்". இதைப்போன்ற அடையாளங்களின் விளைவாக பெருந்திரளான மக்கள் தொடர்ந்து சபையிலே சேர்க்கப்பட்டார்கள். (அப்போ5:14)"திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடமாக அதிகமதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்".

3- வியாதியஸ்தர்மேல் கைகளை வைத்தல்:

சுவிசேஷக குணமளித்தலோடு தொடர்புள்ள ஒரு குறிப்பிட்ட கட்டளை கைகளை வைப்பதாகும் (மாற்கு16:18). "சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார்". இந்த நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை ஆழ்ந்து சிந்தியுங்கள்.

இந்த மக்களின் கலாச்சார அமைப்பில், கைகளை மேல் வைப்பது பெரும்பாலும் யாராவது ஒருவருக்கு ஏதாவது ஒன்றை அளிப்பதற்கே உபயோகிக்கப்பட்டது. பொதுவாக கௌரவப் பட்டம், அல்லது ஒரு ஆசீர்வாதம், ஒரு சலுகை போன்றவற்றை அளிப்பதாகும். இப்படியாக யார் மீது வைக்கப்பட்டதோ அவர்கள் பாரம்பரியமாக எதையாவது ஒன்றைப் பெற்றுக்கொள்வதை எதிர்பார்ப்பார்கள்.

இயேசுவானவர் இந்தக் காரியத்தைப் பற்றி என்ன சொன்னார் "விசுவாசிப்பவர்கள்" மட்டுமே என மாற்கு 16:17ல் கூறப்பட்டுள்ளது. அது இயேசுவானவரின் "நாமத்தினாலே" வைக்கப்பட வேண்டும். விசுவாசிக்கிறவர்களின் கைகள் முன்னாக நீட்டப்பட்டு சுகவீனர்களின் மேல் வைக்கப்பட வேண்டும். இயேசு "அவர்கள் சொஸ்தமாவார்கள்" என்று உறுதியாகக் கூறினார்.(மாற்கு16:18)

நமது கைகளைத் துன்பப்படுகிறவர்களுக்கு நேராக நீட்டும் போது நாம் அவர்களோடு நம்மை ஒன்றுபடுத்துகிறோம். நாம் அதை "இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே" (அப்போ3:6) செய்கிறோம். இதை நாம் விசுவாசத்தோடு செய்யும்போது, கர்த்தருடைய கைகளின் நீட்டுதலாயிருக்கிறோம். நம் கைகள் மூலமே தேவையிலிருக்கும் உலகத்தை தேவன் எட்டுகிறார். சுவிசேஷத்தைப் பிரங்கிப்பதும், சுகவீனர்கள் மேல் கைகளை வைப்பதும் கிறிஸ்துவினுடைய கட்டளையாகும். நாம் அவருக்குக் கீழ்ப்படிபவர்களாயிருக்க வேண்டும். அவர்கள் குணமடைவார்கள். என்று விசுவாசித்து நாம் அதை நம்பிக்கையுடன் செய்ய வேண்டும்.

துன்பப்படுகிறவர்களைத் தொடும்போது, அந்த நொடியில் நாம் தேவனுடைய வாக்குத்தத்தத்தை நமக்குரியதாக்கிக் கொள்கிறோம். இயேசுவானவர், "அவர்கள் சொஸ்தமாவார்கள்" என்று கூறியுள்ளார். உடன்தானே அதே நொடியில் சுகமடைய வேண்டும் என்ற அவசியமில்லை. அது படிப்படியாக நடைபெறலாம். விசுவாசத்தைத் தளர விடாதீர்கள். சந்தேகப்படாதீர்கள். அவரது வசனம் சத்தியமானது.அதுதோல்விஅடையாது.

தொடரும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்று நோயால் எவரும் பாதிக்கப்படலாம்

புற்று நோய் யாருக்கு வேண்டுமானாலும் வரலாம். எப்போது வேண்டுமானாலும் வரலாம். இன்று பலரையும் பயமுறுத்திக் கொண்டிருக்கும் ஒரு நோய். ஆனால் இது பயப்பட வேண்டிய நோயல்ல. விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியது. ஆரம்பத்தில் கண்டுபிடித்தால் 95 சதவீதம் குணப்படுத்தி நிம்மதியாக வாழ முடியும். இந்த நோய்க்கு இப்போது வியக்கவைக்கும் அளவுக்கு நவீன நோய் கண்டுபிடிப்பு கருவிகளும், நவீன ஊசி மருந்துகளும் உள்ளன. அதனால் தரமான சிகிச்சையால் உயிர் பிழைத்து நலமாக வாழ வாய்ப்பிருக்கிறது. ஆனால் அறிகுறிகளை அலட்சியப்படுத்திவிட்டு கண்டு கொள்ளாமலே இருந்தால் மட்டுந்தான் இது ஓர் ஆபத்தான நோயாக மாறுகிறது.

**புற்றுநோய்க்குக் காரணம்?:**

பாரம்பரியத்தாலும் வரும், பழக்கவழக்கத்தாலும் வரும், உணவாலும் வரும், அதிகமாக உடலில்படும் சூரிய ஒளியாலும் வரும். ஆண்களுக்கென்று சில புற்று நோய்களும், பெண்களுக்கென்று சில புற்று நோய்களும், இருபாலாருக்கும் என்று பொதுவான புற்று நோய்களும் உண்டு. ஜீரணக் குடல் புற்றும், விரைப்பகுதி புற்றும் ஆண்களுக்கு அதிகம் வருகின்றன. மார்பு புற்றும், தைராய்ட் புற்றும் பெண்களுக்கு அதிகம் வருகின்றன.

**நோய்க்கான அறிகுறிகள்:**

உடலின் எந்தப் பகுதியிலும் இந்த நோய் வரலாம். எந்த இடத்தில் வருகிறதோ அது அதற்கென்று தனித்தனி அறிகுறிகள் இருக்கின்றன. நுரையீரலில் ஒரு அறிகுறி. ஈரலில் இன்னுமொரு அறிகுறி. இப்படி இடத்திற்கு தக்கபடி அறிகுறிகள் மாறும். ஆயினும் பொதுவாக 10 அறிகுறிகள் உள்ளன. அவை குணமாகாத புண், இரத்த வாந்தி அல்லது புறவழி இரத்தப் போக்கு, சளியில் இரத்தம் வெளிப்படுதல், கட்டி பெரிதாகிக் கொண்டே இருப்பது, மச்சத்தில் அரிப்பு அல்லது இரத்தக் கசிவு ஏற்படுதல், கழுத்துப் பகுதியில் ஏற்படும் வலியற்ற வீக்கம். திடீரென ஏற்படும் எடை குறைவு, காய்ச்சல்,மார்பில் வலியற்று கட்டி தோன்றுதல், உணவை விழுங்குவதில் ஏற்படும் சிரமம், திடீரென்று தோன்றும் அதிக மலச்சிக்கல்.

**புற்றுநோய்க்கான காரணங்கள்:**

**வாய்ப் புற்று:** புகைப்பிடித்தல், புகையிலை மெல்லுதல், பான்-ஜர்தா போன்றவை மெல்லுதல், முறையான பல் பராமரிப்பு இல்லாமை.

**நுரையீரல் புற்று**: புகைப்பிடித்தல், ஆஸ்பெஸ்டோஸ், சிலிக்கான் தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் ஊழியர்களுக்கு இவை வர சந்தர்ப்பம் உள்ளது.

**வயிற்றுப் புற்று**: மது அருந்துதல், புகைபிடித்தல், வறுத்த, பொரித்த உணவுகளை அதிகளவு சாப்பிடும் முறையற்ற உணவுப் பழக்கம்

**ஈரல் புற்று:** மது அருந்துதல் மற்றும் வைரஸ் தொற்று.

**மார்புப் புற்று:** குழந்தை இல்லாமை, ஒரு குழந்தை மட்டும் பெற்றெடுத்தல், தாய்ப்பால் புகட்டாமை, குண்டான உடல்வாகு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கருப்பை புற்று:** அதிகமாக குழந்தை பெற்றெடுத்தல், எச்.பி.வி. வைரஸ் தொற்று. (எச்.பி.வி. வைரஸ் தொற்று ஏற்பட்டு இந்த புற்று நோய் பரவாமல் இருக்க தடுப்பு ஊசி மருந்து கண்டுபிடிக்கப்பட்டு விட்டது. வெளிநாடுகளில் இப்பொழுது பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.)

**சருமப் புற்று:** சருமத்தில்அதிகளவு வெயில்படுதல் சொரியாசில் போன்ற சில வகைத் தோல் நோய்கள், நாள்பட்ட ஆறாத புண். முற்றிலும் மாறுபட்ட இதர காரணங்களால் ஒருவருக்கு நோய் பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம்.

**தடுக்க முடியுமா?**

புகையிலை, மது, புகைப்பிடித்தல், பான்பரக் பயன்படுத்துதல் போன்றவைகளைத் தவிர்த்து விடுங்கள். புற்று நோயையும் முடிந்த அளவு தவிர்த்திட முடியும். "யூமன் பபிலோமா வைரஸ்" மூலம் கருப்பைப் புற்று நோய், ஆண்குறி புற்று நோய் ஏற்படுகின்றது. இவற்றைத் தடுப்பதற்குத் தேவையான தடுப்பூசி மருந்துகள் உள்ளன. அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**நோய் தாக்கியிருப்பதை எவ்வாறு கண்டறிவது?**

முதலில் நாம் குறிப்பிட்டிருக்கும் 10 அறிகுறிகளில் ஏதாவது ஒன்று தென்பட்டால் உடனே டாக்டரிடம் சென்று விடவேண்டும். இரத்தப் பரிசோதனை அல்லது உங்களுக்கு எந்த மாதிரியான பரிசோதனை தேவை என்பதை டாக்டர் சொல்லுவார். அதை வைத்து நோயைக் கண்டறிவார். ஆனால் பயாப்ஸி மூலமே நூறு சத வீதம் கண்டறிய முடியும்.

**குணமாக்க முடியுமா?**

ஆரம்பத்தில் கண்ணறிந்து விட்டால் 95 சதவீதம் குணப்படுத்தி விடலாம். முற்றிய நிலை என்றால் குணப்படுத்துவது கடினம். இதில் மகிழ்ச்சிக்குரிய விஷயம் என்னவென்றால் சில வகைப் புற்று நோய்கள் எந்த வயதில் வந்தாலும் குணப்படுத்த வாய்ப்பிருக்கிறது. இதற்கு "பெட்டன்சியலி க்ரபுள் கேன்சர்" என்று பெயர். சில இரத்த புற்று, நெறி கட்டுவதில் ஏற்படும் புற்று, ஆண் உறுப்பில் பிராஸ்டெட் சுரப்பி அருகில் தோன்றும் புற்று போன்றவை இந்த வகையைச் சார்ந்தவை. புற்று நோயைக் குணப்படுத்த ஆபரேஷன் செய்து கொள்வது அவ்வளவு நல்லதில்லை என்பது சரியல்ல. காலம் மாறிக் கொண்டிருக்கிறது. நவீன ஆபரேஷன் முறைகளும், கருவிகளும் வந்து கொண்டிருக்கின்றன. மருத்துவ நிபுணர்களும் உருவாகிக் கொண்டு இருக்கின்றார்கள். 30,40 வருடங்களுக்கு முன்னால் புற்று நோய்க்கு மேஜர் ஆபரேஷன்கள் செய்யப்பட்டுக் கொண்டிருந்தன. இப்போது சிம்பிளான (இலகுவான) ஆபரேஷன்கள் செய்து, நவீன மருந்து, நவீன தெரபிகள் கொடுக்கப்படுகின்றன. புற்று நோய்க்கான ஆபரேஷன் சற்று ரிஸ்க் (ஆபத்தானது) தான். இருந்தாலும் பயப்பட வேண்டியதில்லை. புற்று நோய்க்கு மூன்று விதமான சிகிச்சைகள் கையாளப்படுகின்றன. அவை

1- ஆபரேஷன் 2- கீமோ தெரபி (மெடிக்கல் ட்ரீட்மெண்ட்) 3- ரேடியேஷன் (எக்ஸ்ரே ட்ரீட்மெண்ட்)

நன்றி பேராசிரியர் சி.எம்.கே.ரெட்டி
(தலைவர்: தமிழ்நாடு மருத்துவர் சங்கம், சென்னை)


---

**கொஞ்சம் சிரிங்க**

"பல் டாக்டர் பரமசிவம் நல்லா பல் புடுங்குறாரா?"
"பல் புடுங்குறதவிட பீஸத்தான் நல்லா புடுங்குறாரு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதுளம் பழத்தின் மகிமை



இப்பழத்தின் சுவையில் மூன்று தன்மைகள் உண்டு. இனிப்பு, புளிப்பு, இனிப்புடன் புளிப்பு ஆகும். இதன் செய்கை வெப்பமகற்றியாகும். குளிர்ச்சியை உண்டாக்கும். வயிற்றெரிவு, நெஞ்செரிவு, கண்ணெரிவு போன்றவற்றைத் தணிக்கும் இயல்புடையது. தாகத்தைத் தணித்து நாவரட்சியை அகற்றும் தன்மையுடையது. சிறுபிள்ளைகளுக்கு ஏற்படும் சளித்தன்மையை குணப்படுத்தும். சித்த வைத்தியர்கள் சிறுவர்களுக்கு சில மருந்துகளைக் கொடுக்கும்போது மாதுளம் பழச்சாற்றை அனுமானமாகப் பாவிப்பது உண்டு. பெரும்பாலும் முக்கூட்டு குளிகை(கோரோசனை + கஸ்தூரி + குங்குமப்பு) கோரோசனைக் குளிகைகளை கொடுக்கும் போது தணித்தோ அன்றி மற்று சாற்றுடன் +பாலுடன் சேர்த்தோ வருவதினால் நற்பயன் உண்டு.

அடுத்து மாதுளம்பழம் வாங்கும் போது மாதுளம்பழ விதைகளை எடுத்தபின் அதன் ஓட்டுப்பகுதியை வீசிவிடாதீர்கள். நன்கு துண்டாக்கி அதை உலர்த்தி வைத்திருந்தால் சிறுவர்களுக்கு ஏற்படும் வயிற்றோட்டம், வயிற்றுளைவு போன்ற நிலையில் நன்கு அளவான நீர்விட்டு அவித்து கசாயமாக்கி (குடிநீர்) காலை, மாலை வயதிற்கேற்ப 1,2 மேசைக்கரண்டி கொடுத்துவர ஒருவித பிரச்சனையும் இன்றி குணம் கிடைக்கும். நிலைமைக்கு ஏற்ப தேனையும் கூட்டிக் கொடுக்கலாம். எதற்கும் வைத்தியர்களின் ஆலோசனையைப் பெற்றக் கொடுப்பது நல்லது.

மாதுளம்பழத்தின் வித்து (விதை) மிகவும் நன்மை பயக்கக்கூடியது. பழத்தைச் சாப்பிடும் போது விதையையும் சேர்த்து மென்று உள்ளே செலுத்துவதினால் பலத்தைக் கொடுத்து வலுவை உண்டாக்கும். இப்பழத்தில் உயிர்சத்து A,B,C நிறைந்து காணப்படுவதனால் பயமின்றி யாவரும் பாவிக்கலாம். மது மயக்கம் உள்ளோர் இப்பழத்தை பாவித்து வந்தால் குடல் எரிவு, அவியல் ஏற்படாது பாதுகாக்கும் தன்மையுடையது. அத்துடன் இப்பழச் சாற்றினால் இருதயம் வலுப்பெற்று மூளை இயக்கங்களுக்கு வழியமைக்கும், ஞாபக சக்தி விருத்தியடையும், வயிற்றில் சாதாரண நிலையில் புளிப்பு இருந்தால் மாதுளம்பழ வித்து உள்முத்துக்களையும் சேர்த்துப் பாவித்து வந்தால் நற்பயனுண்டு. வயிற்றுப் புண்ணும் குணமாகும்.

மாதுளம்பழம் சாப்பிட்டால் மார்பக புற்றுநோய் வராது. மாதுளம்பழம் சாப்பிடுபவர்களுக்கு மார்பக புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பு குறைவு என ஆய்வில் தெரியவந்துள்ளது. அண்மைக்காலமாக மார்பக புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஆஸ்ட்ரோஜென் எனப்படும் ஹர்மோன் காரணமாகவே 4 ல் 3 பெண்களுக்கு புற்று நோய் வரலாம் என கணிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஹர்மோன் காரணமாக ஏற்படும் புற்று நோயிலிருந்து தப்பிக்க மாதுளம்பழம் சாப்பிடலாம் என ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். மாதுளம்பழத்தில் இயற்கையாகவே பைட்டோகெமிக்கல் உள்ளது ஆய்வில் தெரிய வந்துள்ளது. எல்லஜிக் அமிலம் என்று அழைக்கப்படும் இது, மார்பக புற்று நோய்க்கு காரணமான செல்கள் மற்றும் கட்டி வளர்வது தடுக்கப்படுகிறது. மாதுளையில் அதிக மருத்துவ குணங்கள் உண்டு. மாதுளம்பழத்தை அதிகம் சாப்பிடுங்கள்.

---

**கொஞ்சம் சிரிங்க**

டாக்டர்: "நான் இல்லாத நேரம் நோயாளிங்க யாரும் வந்தாங்களா?"

நர்ஸ்: "நீங்க இருக்கிற நேரத்திலேயே யாரும் வாறதில்லையே டாக்டர்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உச்சி முதல்...!

டாக்டர் லோகமுத்துக்கிருஷ்ணனிடம் உடலின் எந்தப் பகுதியை "நம்பர் ஒன்" தலைவராகச் சொல்லுகிறீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு டாக்டர் அவர்கள் சிரித்துக் கொண்டே "நிகரில்லாதது" என்ற வர்ணனை மூளைக்குத்தான் பொருந்தும். ஏனெனில் செயற்கைக் கை, செயற்கைக் கால், செயற்கைச் சிறுநீரகம், செயற்கை மூச்சோட்டம், செயற்கை இதயம் எல்லாம் வந்தாயிற்று செயற்கை மூளை என்று ஒன்று இதுவரை தயாரிக்கப்படவில்லை. இதயமாற்று, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகள் நடக்கின்றன. முழு மூளை மாற்று அறுவைசிகிச்சை (Whole Brain Transplantation) மட்டும் சாத்தியமேயில்லை.

நம் உடம்பில் ஒவ்வோர் அசைவையும், இயக்கத்தையும் கட்டுப்படுத்துவது மூளை. மூளை தான் உயிர். இந்தச் சிறிய பகுதியில் இருக்கும் செல்களின் எண்ணிக்கை இருபது டிரில்லியன். அதாவது இரண்டாயிரம் கோடி கோடி. மூளையில் இருக்கும் நரம்பு நார்களை எடுத்து ஒன்றன்பின் ஒன்றாகச் சேர்த்து வைத்தால், அந்த நீளத்துக்குப் பூமியிலிருந்து சந்திர மண்டலம் வரை போய்விட்டுத் திரும்பலாம். ஆனால் எண்ணிக்கையோ, நீளமோ, பருமனோ முக்கியமல்ல. அதன் உள்ளே இயங்கும் சர்க்கியூட்டுகள்தான் முக்கியம்! கண் இமைக்காமல் ஒருவரைப் பார்க்கவேண்டுமானால், அதற்கு ஒரு சர்க்கியூட் அப்படிப் பார்த்தால் கிளம்பும் மூச்சை வெளியேற்ற இன்னுமொரு சர்க்கியூட்.

☛ "உயிர்" என்றால் அது நெஞ்சில்தான் - இதயத்தில்தான் இருக்கிறது என்று அந்தக்காலத்தில் நினைத்துக்கொண்டிருந்தார்கள் இல்லையா?

மூளையின் முக்கியத்துவம் உணரப்பட்டது ஒரு சுவாரஸ்சியமான தனிக்கதை! உடலை அறுத்துப் பார்க்கும் நவீன முறை வந்த பிறகுதான் "மூளை" என்கிற ஓர் உள்ளுறுப்பு கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கு முன்பெல்லாம் தலையை வெட்டினால் ஆள் சாய்ந்து விடுகிறான் என்கிற அளவில்தான் தெரிந்திருந்தது. மருத்துவத்தில் மிகவும் முன்னேறியவர்கள் சீனர்கள். இவர்களின் அகராதியில் "மூளை" என்பதைக் குறிக்க வார்த்தையே கிடையாது!

மூளையைப் பற்றித் தவறாகவாவது முதலில் யூகித்தவர்கள் கிரேக்க மருத்துவ விஞ்ஞானிகள்தான். Brain என்கிற ஆங்கில வார்த்தை Bran என்கிற கிரேக்கச் சொல்லிலிருந்து வந்தது! இதற்குச் "சதைப் பிண்டம்" என்று அர்த்தம்! அதாவது மூளை எதற்கும் உதவாத வெற்றுச் சதை என்று தான் நினைத்திருந்தார்கள்!

பிற்காலத்தில் வந்த கிரேக்க அறிஞர் கேலன், நாம் உள்ளே இழுக்கும் மூச்சு மூளைக்குப் போய் உயிர்ச் சக்தியாக மாறி இதயத்துக்கு வருகிறது என்று சொன்னார். இது சரியில்லைதான் என்றாலும், மூளையின் முக்கியத்துவத்தை இது ஓரளவு வெளிப்படுத்துகிறது.

கி.பி. ஆறிலிருந்து எட்டாம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தில் தான் மூளையைப் பற்றிய ஆராய்ச்சிகள் வேகமாயின. மூளையைப்பற்றி இன்று நமக்கு இந்த அளவு தெரிந்திருப்பதற்குக் காரணம் இரண்டு திருடர்கள்தான் என்று சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள் இல்லையா... ஆனால் உண்மை அதுதான்.

எடின்பரோ நகரில் பர்க், ஹாரே என்று இரண்டு திருடர்கள் இருந்தார்கள். வெவ்வேறு சிறு திருட்டுகள் ஒன்றும் அவ்வளவு லாபகரமாக இல்லை என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு வருத்தம். இந்தச் சூழ்நிலையில் அவர்கள் மூளையில்(!) ஒரு ஐடியா 'கிளிக்' ஆகியது. மனித உடலை அறுத்துப் பார்க்கத் தடை இருந்த அந்தக் காலத்தில் டாக்டர்களுக்குப் பிண சப்ளை செய்ய ஆரம்பித்தார்கள். சமீபத்தில் அடக்கம் செய்யப்பட்ட பிணங்களை கல்லறையிலிருந்து திருடிவருவார்கள்! கூடவே சம்பந்தப்பட்டவர்கள் சாவதற்கு முன்னால் அவர்களுக்கு இன்ன உடல் குறைபாடு – நோய் இருந்தது என்ற தகவல், இடது கையில் முடக்கு வாதம் இருந்த ஒருவரின் கபாலத்தைப் பிளந்து பார்த்தால் மூளையின் வலது பக்கம் அதற்கான அடையாளங்கள் இருப்பதை டாக்டர்கள் கண்டுபிடித்தார்கள். ஆச்சரியப்பட்டார்கள், சிந்திக்க ஆரம்பித்தார்கள். இப்படி ஆரம்பத்தில் தோன்றியதுதான் மூளை ஆராய்ச்சி.

☛ மூளையின் மகத்துவம் பற்றித் தெரிந்துகொள்ள இது ஒன்று

பொறுமை.... பொறுமை! அது ஆரம்பம்தான். அதன் பிறகு ஆராய்சிகளின் தன்மை வளர்ச்சியடைந்தது.. தங்கள் சிகிச்சைக்காக வரும் நோயாளிகளின் மூளையை அவர்களின் சம்மதத்தோடு (வெளியிலிருந்துதான்!) சோதனை செய்து பார்க்க ஆரம்பித்தார்கள். இந்த ரீதியில் முக்கியமானது எலெக்ட்ரிக் ஸ்டிமுலேஷன் சோதனை. மூளையின் பகுதிகளில் மெல்லிய மின்சாரத் தூண்டுதல் கொடுப்பார்கள். உடனே உடலின் குறிப்பிட்ட உறுப்பு...இப்படியே மூளையின் எந்தப்பகுதி உடலின் எந்த உறுப்பைக் கட்டுப்படுத்துகிறது என்று மெள்ள மெள்ளக் கண்டுபிடித்தார்கள். சில இடங்களில் ஷாக் கொடுக்கும் போது நோயாளி கோபிப்பதையும், வேறு சில இடங்களில் ஷாக் கொடுத்தால் நோயாளி சிரிப்பதையும் பார்த்து மூளையின் எந்தப்பகுதி எந்த உணர்ச்சியை உருவாக்குகிறது என்பதையும் கூடக் கண்டுபிடிக்க முடிந்தது. இந்த முக்கியமான பரிசோதனையில் வெற்றி கண்டவர் பென்ஃபீல்ட்.

❖ மூளைக்கு எலெக்றிக் ஷாக் கொடுத்தால் அதற்கு வலிக்காதா...?

இது இன்னொரு விசித்திரமான விஷயம் உடலின் எந்தப் பகுதியில் அடிபட்டாலும், அதன் பிரதிபலிப்பு மூளையில் தான் வலியாக உணரப்படுகிறது. மூளை முழுக்கச் செயற்படாத நிலையில் மயக்கமாக இருக்கும் ஒருவரை அடித்தால் அவர் அம்மா என்று கத்துவதில்லை எப்பகுதியிலிருந்து இதைத் தெரிந்து கொள்ளலாம். ஆனால் பிற உறுப்புக்களின் வலியை உணர்கிற மூளை, தன்மீது அடிக்கப்பட்டால் வலியாக உணர்வதில்லை. குறைந்தபட்சமான தொடு உணர்ச்சி கூட மூளைக்குக் கிடையாது. மூளையில் அறுவை சிகிச்சை செய்யும் போது மூளைக்கென்று மரத்துப் போகும் ஊசிகூடப் போடுவதில்லை. நேரடியாக மூளையின் குறிப்பிட்ட இணைப்புகளை "ஃபிராண்டல் லோபோடமி" மூலம் தடிக்கும் சர்ஜரிக்கு 'ஐஸ்பிக் சர்ஜரி (Icepic Surgery) என்று பெயர். இது ஐஸ் பழக் குச்சியாலேயே முதலிலெல்லாம் இந்த ஆபரேஷனைச் செய்திருக்கிறார்கள்.

அடுத்த சஞ்சிகையில் எதிர்பாருங்கள் தூக்கமும்...திடுக்கிடும் நோய்களும்...!

நன்றி

---

## கொஞ்சம் சிரிங்க!!!

நோயாளி:"டாக்டர் ஏ.சியை கொஞ்சம் ஆப் பண்ணுங்க. குளிர் நடுங்குது.."
டாக்டர்:"இதுக்கே இப்படி நடுங்குறியே, பிணவறையில் உறையுற ஐஸ்ல இல்ல வைப்பாங்க.. அப்ப என்ன செய்வ?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# படித்ததில் பிடித்தவை

## பொறாமை

பசியால் வாடுகின்ற ஒருவனைக் கண்டால் நாம் பரிதாபப்படுவோம். துன்பத்தில் துவளும் ஒருவருடைய வேதனை நம்முடைய கண்களில் கண்ணீரை வரவழைக்கும். நோயினால் துன்புறும் ஒருவருக்காக நம்முடைய மனம் மிகவும் வேதனையடையும், ஆனால் நம்மைவிட இன்னொருவர் அதிக சந்தோஷமாயிருப்பதைக் கண்டால் அதைப் பார்த்து நாம் சந்தோஷப்பட முடியுமா? என்பது கேள்விக்குரிய விஷயம். இன்னொருவர் ஒரு பெரிய வசதி நிலையை அடையும் போதும், பலரால் புகழப்படும் நிலையைக் காணும் போதும் அது நமக்கு மகிழ்ச்சியைத் தருமா? என்பது சிக்கலான ஒரு கேள்வியே.

ஆனால் இன்னொருவனின் துன்பத்தைக் கண்டு கண்ணீர்விட இயன்ற மனிதனுக்கு, இன்னொருவனின் நல்ல நிலமையைக் கண்டு சந்தோஷப்படுவது என்பது கடினமான விஷயமே. தம்பி ஒரு வீட்டைக் கட்டினால் அண்ணனுக்கு அது வருத்தமாயிருக்கிறது. ஒருவன் ஒரு காரை வாங்கினால் அவனுடைய நண்பனுக்கே அது கஷ்டமாயிருக்கிறது. அண்டைவீட்டு மாணவன் அதிக மார்க் வாங்கிப் பரிசு பெற்ற செய்தியைக் கேட்டு வாழ்த்துச் சொன்னாலும் இருதயமோ “என் வீட்டுப் பிள்ளைக்கு இது கிடைக்கவில்லையே” என்று வருந்துகிறது.

சவுல் ராஜாவின் கௌரவத்தைக் காப்பாற்றி ஒரு நாட்டையே காப்பாற்றியவன் தாவீது. ஆயினும் அந்த தாவீதுக்கு நாட்டு மக்களால் பாராட்டுக் கிடைக்கும் போது அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் காய்மகாரத்தால் கஷ்டப்பட்டான் சவுல் ராஜா. எனவே தோளில் தூக்கி வைத்து கனப்படுத்த வேண்டிய தாவீதை சவுல் காலில் போட்டு மிதிக்க விரும்பினான்.

காரணம் என்ன? பொறாமை பல கெட்ட சுபாவங்கள் மனிதனை விட்டு வேகமாக வெளியேறும் வேளைகள் உண்டு. ஆயினும் பொறாமையோ நான் மட்டும் இங்கேயே இருந்து கொள்கிறேன் என்று சொல்லிப்போக மறுக்கும். ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகவும் போராடி அகற்ற வேண்டிய ஒரு இயற்கையான துர்க்குணம் பொறாமையே. தங்களுக்குக் கரிசனையோடு உதவி செய்ய வந்த தம்பியை யாக்கோபின் மக்கள் குழியில் தூக்கிப் போட்டார்களே. பொறாமையின் வலிமை எவ்வளவு என்பதை அது விளக்குகின்றது. இயேசுவை சிலுவையில் அறைந்து கொல்ல வேண்டும் என்று பரிசேயர்களும், சதுசேயர்களும் முடிவு செய்வதற்குக் காரணமாயிருந்த முக்கிய சுபாவம் அவர்மேல் அவர்களுக்கு இருந்த பொறாமை தானே.

பொறாமை வலுவிழந்து போக வேண்டுமானால் அன்பு இருதயத்தில் வலிமை அடையவேண்டும். ஏனென்றால் அன்பு கூரும் வலிமையில் குன்றி இருப்பதின் விளைவாகத்தான் பொறாமை வல்லமையாகச் செயல்படுகிறது. தேவ அன்பினால் உள்ளம் எந்த அளவு நிரப்புமோ, அந்த அளவிற்குத்தான் பொறாமை என்னும் பேய்க் குணத்தை வெளியேற்ற முடியும்.

நன்றி ஜீவநீரோடை -

**பிறருடைய வீழ்ச்சி உன்னைத் துக்கப்படுத்தலாம்**

**பிறருடைய எழுச்சி உன்னை மகிழ்விக்கிறதா என்று பார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசர வார்த்தை

துப்பாக்கியிலிருந்து தோட்டா வெளியேறி விட்ட பிறகு அதனைத் திருப்பவோ, திசை மாற்றவோ முடியாது. அதே போல வாயிலிருந்து வெளியேறி விட்ட வார்த்தைகளைத் திருப்ப முடியாது. உங்களுடைய வாழ்க்கையிலே எத்தனையோ முறை நீங்கள் ஒருமுறை பேசிவிட்ட வார்த்தைகளுக்காகப் பின்னர் மிகுதியாக வருந்த நேரிட்டிருக்கிறது. அவசரமாக யோசனையின்றிப் பேசிவிட்ட வார்த்தைகளால் எத்தனையோ உறவுகள் உடைந்து போயிருக்கிறது. எத்தனையோ நல்ல நட்புகள் இழக்கப்பட்டிருக்கிறது.

சிலர் எனக்கு எதையும் மறைக்கத் தெரியாது, நான் மனசில் பட்டதை "பட்" என்று சொல்லி விடுவேன், எனக்கு சரி, தவறு என்று எது தோன்றுகிறதோ உடனே அதைச் சொல்லாமலிருக்க முடியாது என்றெல்லாம் கூறுவதை அடிக்கடி கேட்டிருப்பீர்கள். மனதில் பட்டதையும், சரி தவறு என்று உணர்ந்ததையும் மனதில் மறைத்து வைக்காமல் பேசுவது ஒருவிதத்தில் ஒரு நல்ல பண்புதான். ஆனால் நம்முடைய மனதில்படுவது எல்லாம் சரி என்றோ, தவறு என்றோ உணர்ந்ததைச் சரியாகத்தான் என்றோ கூறி விடமுடியாது. நம்முடைய மனதின் உணர்வுகளையும், நிதானிப்புகளையும், நாம் முழுமையாக நம்பி அவசரமாகப் பேசிவிடுவது நமக்குப் பலவேளை களிலும் பாதகமாகவே மாறும்.

நம்முடைய வாயின் வார்த்தை களுக்காக நாம் நியாயந்தீர்க்கப் படுவோம் என்றார் ஆண்டவராகிய இயேசு. (மத்தேயு 12:36) நம்முடைய உணர்வுகளும், நிதானிப்புகளும் நேரத்துக்கு நேரம் மாறுகின்ற அபாயத்தன்மை உடையது. எனவே உணர்வுகளின் வேகத்திற்கு இசைந்து வார்த்தைகளைக் கட்டுப்பாடு இன்றி அள்ளி வீசுவது, பின்னால் மனஸ்தாபப்பட்டாலும் சரி செய்ய முடியாத சீர்கேடுகளுக்கு நம்மை அழைத்துச் சென்றுவிட முடியும். கர்த்தருடைய சமூகத்தில் அவரோடு பேசுகிற பாக்கியத்தைப் பெற்ற நாம் பிறரோடு பேசும் போதும் அதற்கேற்ற ஞானத்தோடும், பரிசுத்த உணர்வோடும் பேசவேண்டியது அவசியம். உணர்வு களை அடக்குவதும் தவறு. அவரசப் பட்டுக் கொட்டி விடுவதும் தவறு. நாம் கர்த்தருடைய பிள்ளைகள் என்ற உணர்வோடு எதை, எப்படி, எங்கே எந்த உணர்வோடு பேச வேண்டும் என்பதில் விழிப்பாயிருக்க வேண்டும்.

நம்முடைய நாவின்மேல் போதிய கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பது முக்கியமான ஒரு ஆவிக்குரிய பண்பாகும். நாவானது முழுச் சரீரத் தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கர த்தைக் கொழுத்தி விடுகிறதாயும் இருக்கிறது என்ற யாக்கோபின் எச்சரிக்கையை வேதாகமத்தில் பார்க் கின்றோம். (யாக்கோபு 3:6) "நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப் படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்தி விடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிற தாயும் இருக்கிறது!" ஆம் அவசர வார்த்தைகளை அள்ளி வீசி அதன் பின்பு வருந்துவதற்கு இடந்தராமல் இருப்போமாக.

நன்றி ஜீவநீரோடை —

**பேசிவிட்ட வார்த்தைகளுக்காகப் பின்னர் வருந்த முடியும் ஆனால் அதனால் ஏற்பட்ட விளைவுகளை மாற்ற முடியாது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயக் கண்ணோட்டம்

தொடர்ச்சி... **திருநீறு**

ஆனால் இறைவன் மனிதனாகத் தன்னை நீற்றிவிட்ட பின்பு புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இப்பழக்கத்தை கிறிஸ்து எப்படி மாற்றினார் என்பதைக் கீழ்வரும் வசனங்கள் விளக்குகின்றன. (எபிரேயர் 9:11-14) "கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டிசம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமமுமான கூடாரத்தின் வழியாகவும், வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார். அதெப்படியெனில், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தமும், தீட்டுப்பட்டவர்கள்மேல் தெளிக்கப்பட்ட கடாரியின் சாம்பலும், சரீரசுத்தியுண்டாகும்படி பரிசுத்தப்படுத்துமானால், நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!"

எனவே நீற்றப்பட்ட சாம்பலைக் குழைத்துச் சரீரத்தில் அணிந்து கொள்வதைக் காட்டிலும், நீற்றப்பட்ட இறைவனை உள்ளத்தில் அணிந்து அவரைப்போலவே வாழ தன்னை ஒப்புக்கொடுப்பது அதிக நல்லதல்லவா?

தன்னைத்தானே நாற்பது நாட்கள் காய வைத்து நீற்றிக்கொண்டவர் கிறிஸ்து இயேசு ஒருவரே! புதிய ஏற்பாடு எபேசியர் 4:22-24ல் சொல்கிறது "அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்."

வெறும் அடையாளத்தைத் தரித்துக் கொண்டு மறு பிறப்பின் வாழ்க்கை இல்லாமல் இருப்பதைக் காட்டிலும் இயேசுவை உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு சாட்சியாக இருப்பது நல்லதல்லவா?

தனது பாவங்களுக்காக இறைவன் தன்னைத்தானே நீற்றினார் என்று நம்பி, அப்படி நீற்றப்பட்ட (பலியான) இறைவனை ஏற்றுக்கொள்ளாமல், வெறும் திருநீற்றைப் பூசிக்கொள்வதும், ஆறு, குளங்களில் மூழ்குவதும், மந்திரங்களை மனப்பாடம் செய்து உச்சரிப்பதும் ஒரு ஆத்துமாவை பரகதியில் (முக்தியில்) சேர்ப்பது இல்லை. இதை மனதிற் கொண்டே

"நீற்றைப் புனைந்தென்ன? நீராடப் போயென்ன நீ மனமே
மாற்றிப் பிறக்க வகையறிந்தாயில்லை – மாமறைநூல்
ஏற்றிக் கிடக்கும் ஏழு கோடி மந்திரம் என்ன கண்டாய்?
ஆற்றில் கிடந்தும் துறையறியாமல் அலைகின்றாயே" என்று

பட்டினத்துப் பிள்ளையார் பாடினார்.

ஜென்ம பாவத்தில் பிறந்த மனிதன் தன்பாவப் பிறவிக்காகவும், பாவச் செய்கைக்காகவும், மனம்வருந்தி, தனக்காகத் தன்னை நீற்றிக்கொண்ட இயேசு பெருமானை அணுகி அவர் சிந்தின இரத்தத்தினால் பாவ மன்னிப்பைப் பெற்று பாவத்துக்கு மரித்துப் புதிய வாழ்க்கையைக் கைக்கொண்டு நடக்கும் போதுதான் திருநீற்றின் மெய்ப்பொருளைக் காண்கிறான். பொய்க்கதைகளையும், புராணக்கதைகளையும் நம்பி அவைகளே தனக்கு முக்தி தரும் என நினைப்பவர்களைப் பார்த்து வள்ளலார் பாடுகின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கலையுரைத்த கற்பனையை நிலையெனக் கொண்டாடும்
கண்மூடி வழக்க மெல்லாம் மண் மூடிப்போக..."

இவை யாவற்றையும் வாசித்து சிந்தித்து முடிவு செய்ய இறைவன் நமக்கு புத்தியைத் தருவாராக. மதுரை ஆதீன தரும கர்த்தாவான ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத்தம்பிரான் அவர்கள் இந்தியாவின் திருநீற்றை அடிப்படையாக வைத்துத்தான் பாலஸ்தீன யூத மக்கள் ஆட்டை அடித்து அதின் சாணத்தை எரிக்க விறகு இல்லாமையினால் அதின் உடலோடு எரித்து அந்தச் சாம்பலை பாவ நிவாரணத்திற்கு உபயோகித்தார்கள் என்று கற்பனை வளத்துடன் எழுதியுள்ளார்கள். பழைய ஏற்பாட்டு யூதர்கள் வாழ்ந்த காலத்தில் இந்நாட்டிற்கு இந்தியா என்ற பெயரும் கிடையாது. இந்நாட்டு வேதங்களாகிய ரிக்,யஜுர்,சாம வேதங்களிலோ, சங்க இலக்கியங்களிலோ திருநீற்றைக் குறித்த எந்த குறிப்பும் கிடையாது. திருநீறு பூசுவது கி.பி.யில் ஏற்பட்டது. யூத மார்க்கத்தமைந்த அனேக மக்கள் கைபர் போலன் கணவாய் வழியாக இந்நாட்டிற்குள் நுழைந்து, அவ்வழக்கங்களின் சிலவற்றை வேதங்களுடன் கலக்க முடியாமல் புராண இதிகாசங்களுடன் கலந்து விட்டார்கள். திரு நீற்றின் ஆரம்பம் பழைய ஏற்பாடு புதிய ஏற்பாட்டில் இறைவன் தன்னையே நீற்றினார். அவரை அணிந்து கொள்வதே பாவ மன்னிப்பின் நிச்சயமாகும். அந்த நிச்சயத்தை உடையவர்களே முக்தியடைவார்கள்.

"நீற்றினை அணிந்தது என் இறைவன் என்றே
சாற்றினை உயிர்க்கிடர் தணிப்ப என எண்ணினாய்
தோன்றியுள்ள தம் புதல்வர் துன்பமுறு மந்நோய்
மாற்றும் வகை அன்னையர் அருந்திய மருந்தாம்" (வள்ளலார்)

**பொருள்**:

தன்பிள்ளை நோயால் வருந்துவதைக் கண்டதாய், தானே பிள்ளைக்காக மருந்துண்டு, பத்தியங்காத்து, அதனால் உண்டான பாலை பிள்ளைக்கு ஊட்ட, பிள்ளை வியாதி நீங்கிப் பிழைத்து இன்புறுவது போல கடவுளும், பாவநோயால் வருந்துகின்ற மானிடருக்காகத் தன்னையே தியாகஞ் செய்வதற்கு அடையாளமான நீற்றினை(பலியை) அணிந்தார்.

"விஸ்வகர்மா எனப்பட்ட பிரஜாபதியாகிய புருஷன் தன்னையே பலியாக்கி (நீற்றி) இரத்தம் சிந்தி நம்மை மீட்டுக் கொள்வானாகவும்"(ரிக், புருஷ சூக்தம்)

"அன்பைப் பெருக்கி எனதாருயிரைக் காக்க வந்த
இன்பப் பெருக்கே இறையே – பராபரமே"

"தன்னைத் தந்து என்னைத் தடுத்தாட்கொண்ட நின் கருணைக்கு
என்னைத் தந்து என்ன பயன் எந்தாய் - பராபரமே" (தாயுமானவர்)

தாம் உண்டாக்கின மனுக்குலத்தை அழிவிலிருந்து மீட்கும் பொருட்டுத் தம்மையே பலியாகத் தந்த அல்லது நீற்றி இவ்வளவாய் அன்பு கூர்ந்த அந்த எம்பெருமான் இயேசு கிறிஸ்துவை அணிந்து, எண்ணிலாப் பெறு பெறுவோமாக!

கிறிஸ்துவ நிலையில் பைபிளில் நான் கண்ட திருநீறு இதுவே! நீற்றப்பட்ட ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை மனதில் கொள்ளுவதையே நான் விரும்புகிறேன். ஏற்றுக்கொள்வதும், கொள்ளாததும் உங்கள் விருப்பம்.

நன்றி சாது செல்லப்பா –

**கொஞ்சம் சிரிங்க**

ஆசிரியர்: அமெரிக்காவைக் கண்டுபிடித்தவர் யார்?
மாணவன்: சார்! முதலாவது யார் தொலைத்தது எண்ணு சொல்லுங்க
அப்புறம் கண்டுபிடிச்சது யார் எண்ணு சொல்றன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைக்கு சில...

## ஓ மனிதனே!

உன்னை நீ சரியாக பார்க்கக் கவனமாயிருந்தால் பிறர் உன்னைத் தவறாகப் பார்த்தாலும் கவலைப்படமாட்டாய்.
நீ அற்புதங்களைத் தேடுகின்றாய் அதிசயங்களை நாடுகின்றாய். உன்னுடைய சுபாவங்கள் மாறவேண்டிய தேவையையும் உன்னுடைய குணங்கள் சீர்பெறவேண்டிய அவசியத்தையும் நீ உணராமல் வாழ்கின்றாய்.
நீ பெரும்பாலும் உன்னுடைய தேவைகளை அடையமுடியாமல் அல்ல ஆசைகளை நிறைவேற்ற முடியாமலே விசனமடைகின்றாய். அந்த ஆசைகள் உனக்கு அவசியமற்றவைகள் என உணராதிருக்கிறாய்.
உனக்கு உன் குறைகுற்றங்களை யாரும் கூறினால் அவர்களை வெறுத்து எதிரியின் கண் கொண்டு பார்ப்பாய் அதே குற்றத்தை வேறொருவர் செய்ததை நீ அறிந்தால் அதை பலரிடமும் எடுத்துச் சொல்லி விமர்சிப்பதில் உனக்கு அலாதி விருப்பம்.
உனக்கு யாரும் புத்தி சொன்னால் அது உனக்கு கசப்பாயிருக்கும் அவன் நண்பனாயிருந்தாலும் எதிரியாக கருதுவாய். ஆனால் நீ ஒரு அறிவாளியாக அநுபவசாலியாக உன்னைக் காட்டிக்கொண்டு மற்றவர்களுக்கு புத்தி சொல்ல முந்திக்கொள்வாய். குருடன் குருடனுக்கு வழிகாட்டுவதுபோல இருக்கும்.

அன்பான சகோதரனே! சகோதரியே! இதை வாசிக்கும் நீ அந்த மனிதனின் குணாதிசியங்களில் ஒன்றாகிலும் உன் வாழ்க்கையில் காணப்படுமானால் உன் வாழ்க்கையை சீர்ப்படுத்தி மேன்மையான வாழ்வை வாழ கற்றுக்கொள்.
பரிசுத்த வேதாகமம் கூறும் ஆலோசனையைக் கேள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஜனங்களைப் பார்த்து கூறிய வார்த்தைகள் இதோ.... "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள். உப்பானது சாரமற்றுப் போனால் எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும் மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது". தொடர்ந்து அவர் கூறியது. "நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாய் இருக்கிறீர்கள். மலையின் மேல் இருக்கின்ற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது. விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல் விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள். அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும்".
இவ்விதமாக மனுஷர் உங்கள் நல்ல கிரியைகளைக் கண்டு விண்ணுலகில் வாசமாயிருக்கின்ற உங்கள் இறைவனை கனப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் உலக மக்கள்முன்பாக பிரகாசிக்கக்கடவது என்றார்" (புதிய ஏற்பாடு மத்தேயு 5: 13-16.

அன்பான சகோதரனே! சகோதரியே! இந்த உலகில் நீ வாழும் வாழ்க்கை அர்த்தமுள்ளதாக அமையட்டும். எவ்வளவு காலம் இவ்வுலகில் வாழ்ந்தாய் என்பதல்ல எப்படி வாழ்ந்தாய் என்பதே கவனிக்க வேண்டியது. உனது வாழ்நாள் இவ்வுலகில் குறுகியதாயிருந்தாலும் அது பயனள்ளதாக அமையட்டும்.

வாழ்க வளமுடன்
ஏழாலையூரான்



**கொஞ்சம் சிரிங்க**

"முனுசாமி! ஓங்க வீட்ல இன்னைக்கு கோழிக்கறிதானே.."
"ஆமா... அது ஓங்களுக்கு எப்படி தெரியும்?"
"ஏன்னா எங்க வீட்டுக் கோழி காணாமப் போயிருச்சி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபம்



கோபம் மனிதனை ஆட்டிப்படைக்கும் ஒரு சத்துரு. கோபம் வரும்போது என்ன செய்வது,என்ன பேசுவது என்பது தெரியாது, கையில் அகப்பட்டது எதுவோ அதனால் ஒருவரைத் தாக்குகிறான். அது படக்கூடாத இடத்திலே படுமானால் சில வேளை மரணம் சம்பவிக்கிறது. இப்படியாக கோபம் என்பது மனித வாழ்வில் பலவிதமான பாதிப்புகளை உண்டாக்கிவிடுகிறது. குடும்ப வாழ்விலும் கணவன் மனைவி உறவுகளிலும் கோபம் பெரும் பிளவை உண்டுபண்ணி விடுகிறது. கோபத்தினால் பாதிப்பைத் தவிர எந்த விதமான நன்மையும் இல்லை.

கோபம் என்ற வார்த்தை பரிசுத்த வேதாகமத்தில் ஏறக்குறைய 200க்கும் மேற்பட்ட இடங்களில் இதைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இது என்ன அவ்வளவு முக்கியமான குணமா? ஆம் ஆதிமுதல் மனிதனை அடிமைப் படுத்துகிற குணம்தான் கோபம். தேவன் ஆபேலின் பலியை அங்கிகரித்த போது அவனுடைய சகோதரனாகிய காயீனுக்கு கோபம் வந்துவிட்டது. கோபத்தினால் தன் சகோதரனைக் கொலை செய்தான். கோபம் மனிதனை மிருகமாக்கி விடுகிறது. கோபம் கொலைகாரனாக்கி விடுகிறது. கோபம் கண்ணை மறைத்துக் குருடாக்கி விடுகிறது. இது ஒரு பாவம். இது மனித வாழ்வை அழித்துவிடுகிறது.

வேதத்தில் நாகமான் என்ற ஒரு மனிதன். அவன் சீரிய நாட்டின் படைத்தலைவன். அவனுடைய உடலில் குஷ்டரோகம் இருந்தது. அவன் சுகம் பெறுவதற்கு இஸ்ரவேல் தேசத்திலுள்ள எலிசா தீர்க்கதரி சியிடத்தில் நெடுந்தூரம் பிரயாணம் பண்ணி வந்தான். எலிசா தீர்க்கதரிசி அவனிடத்தில் ஆள் அனுப்பி நீ போய் யோர்தானில்போய் ஏழுதரம் ஸ்நானம் பண்ணு அப்பொழுது உன் மாம்சம் மாறி நீ சுத்தமாவாய் என்று சொல்லச் சொன்னான். இதைக் கேட்ட நாகமான் கடுங்கோபங்கொண்டான். நன்றாய் இருந்த மனிதன் திடீரென்று வெகுண்டு எழுந்தான். அவன் எதிர்பார்த்தது எலிசா எழுந்துவந்து தன்னுடைய உடலில் கையை வைத்து தொட்டுக் குணமாக்குவார் என்று எதிர்பார்த்தான்.

கோபம் நாகபாம்பின் விஷம் போல் திடீரென்று படமெடுத்து ஆடும். நன்றாகவே பேசிக்கொண்டிருப்பார்கள், திடீரென்று பார்த்தால் எங்கிருந்து தான் வருகிறதோ தெரியாது, முகநாடி வேறுபடும், வார்த்தைகள் வெடியைப் போல வெடிக்கும். கோபம் ஒரு மனிதனை தன் சுயக்கட்டுப்பாட்டை இழக்கச் செய்கிறது. தான் பேசுவதில், செய்வதில் கட்டுப்பாட்டை இழந்து விடுகிறான்.

ஒருவேளை நாகமான் அந்தக்கோபத்தோடே திரும்பிப் போயிருப்பார் ஆனால் அவன் வாழ்வில் எவ்வளவு பெரிய இழப்பை அவனடைந்து இருப்பான். நல்ல வேளையாக அவனுடைய ஊழியக்காரர் அவனைப் போல கோபப்படாமல் அமைதலாய் அவனுக்கு எடுத்துரைத் தார்கள். அவன் கோபத்தோடே திரும்பிப் போயிருந்தால் வாழ்நாள் முழுவதும் குஷ்ட ரோகியாய் இருந்திருப்பான். சாந்தம் நன்மையைக் கொண்டுவரும். கோபம் நஷ்டத்தை ஏற்படுத்தும். கோபம் ஒரு விசுவாசிக்கோ, ஒரு தனி மனிதனுக்கோ அழகல்ல. சாந்தமும், அமைதலுமே அவனுக்கு அழகு. உங்களுக்கு கோபம் இருக்குமானால் அதை முழுவதுமாக விட்டுவிட விரும்புவீர்களானால் ஆண்டவர் இயேசுவண்டை வாருங்கள்.

மேய்ப்பன் -

**நேற்றைய பொழுதும் நிச்சயமில்லை. நாளைய பொழுதும் நிச்சயமில்லை, இன்றைக்கு மட்டுமே கையில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்கொப் புவிக்க வேண்டும்

ஒரு தேவ மனிதர் இரயிலைப் பிடிப்பதற்காக வேகமாக இரயில் நிலையத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். நுழைவாயிலில் இரு மனிதர்கள் சரியான உடையின்றி, எலும்பும், தோலுமாக உடலில் உயிரே இல்லையோ என சந்தேகிக்கும் அளவுக்குப் பரிதாபமாகப் படுத்திருந்தனர். ஒரு நிமிடம் நின்று அவர்களுக்காக ஜெபித்து விட்டு கடந்து சென்றார். இரயிலில் அமர்ந்தவுடன் தனது உடலைப் பார்த்தார், உடையைப் பார்த்தார், கண்ணீர் நிறைந்த கண்களோடு இயேசுவே ஏன் அவர்களை மட்டும் இவ்வாறு வைத்திருக்கிறீர்? என்று மனதுக்குள் கேட்டார். சிறிது நேரத்தில் அவருடைய இருதயத்தில் இவ்வாறு உணர்த்தப்பட்டார். அவர்களை விட உனக்கு அதிகம் கொடுத்துள்ளேன். ஆகவே அவர்களை விட அதிகம் எதிர் பார்க்கின்றேன் என்பதாக. அவர் இரயில் பயணத்தில் இன்னும் தன்னைக் கர்த்தருக்கு அர்ப்பணித்தார்.

ஆம், ஐந்து தாலந்து கொடுத்தவனிடம் தேவன் பத்து தாலந்தை எதிர்பார்த்தார். தேவன் நமக்குக் கொடுக்கும் அனைத்தையும் நம் சுய கௌரவத்திற்காகவும், பெருமைக்காகவுமே பயன்படுத்துவோமானால் இவ்வுலகில் மிகவும் வறுமையில் வாடுபவர்களை விட பரிதபிக்கப்பட்டவர்கள் நாமே. தேவன் நமக்கு கொடுத்துள்ள பெரிய வேலையைக் குறித்தோ, பணத்தைக் குறித்தோ, நல்ல உடல் ஆரோக்கியத்தைக் குறித்தோ கணக்கொப்புவி என்று கேட்பாரானால் நமது நிலை எப்படி இருக்கும் என சிந்திப்போமா?

தேவன் உங்களுக்குக் கொடுத்த அதிகமதிகமான பணத்தைக் கொண்டு லேட்டஸ்ட் மாடல் கார்களை வாங்கிக் கொண்டு இருக்கிறோமா? வீட்டில் ஒவ்வொரு பகுதியையும் இடித்து புது மாடலில் கட்டுகிறோமா? அல்லது தேவனுடைய ஊழியத்திற்கு, ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கிறோமா? இப்பொழுதெல்லாம் பெரும் பணக்காரர்கள் தங்கள் புகழ்ச்சிக்காகவே காணிக்கைகளையும், உதவிகளையும் செய்கின்றனர். அப்படிப்பட்ட சிந்தையாயிராதபடி எச்சரிக்கையாயிருப்போம். தற்போதுள்ள உலகில் மாதம் ஐம்பதினாயிரம், ஒருலட்சம் சம்பளம் வாங்குவதெல்லாம் சர்வ சாதாரணமாகி விட்டது. இவ்வளவு பெரிய தொகை நமது திறமைக்கும், படிப்பிற்கும் கிடைத்த பரிசு மட்டுமல்ல, தேவன் நம்மிடம் அதிகமாக எதிர்பார்ப்பதினால் கிடைக்கும் அதிக தொகை என்பதை மறந்து போகாதிருப்போம்.

யோசேப்பிற்கு இவ்வளவு பெரிய பதவி கிடைத்ததென்றால் தமது தாசனாகிய ஆபிரகாமின் சந்ததியைப் பஞ்சத்தில் இருந்து காக்கவே! எஸ்தருக்குக் கொடுக்கப்பட்ட பெரிய பதவி, யூத ஜனங்களின் உயிரைக் காப்பாற்றவே! தானியேலுக்கு அரசியலில் உயர் பதவியைத் தேவன் கொடுத்ததற்குக் காரணம் தம்மைப் பற்றி அறியாத ஜனங்கள் தானியேலின் வைராக்கியத்தின் மூலம் தேவனே கர்த்தர் என்று அறிந்து கொள்ளவே!

பிரியமானவர்களே! தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் பதவியும், செல்வாக்கும் அவரை உயர்த்தவே! அதிகமாக நமக்குத் தேவன் கொடுக்கக் கொடுக்க நாம் அவருக்குத் திருப்பி அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்றே எதிர்பார்க்கிறார். பணத்தில் மட்டுமல்ல, நம்முடைய சாட்சியில், நம்முடைய வார்த்தைகளில், நம்முடைய செயல்களில் அவரை வெளிப்படுத்தவே எதிர்பார்க்கிறார். அரசாங்கத்தில் இருப்பவர்கள் லஞ்சம் ஊழலுக்குச் சாயாத சாட்சியுள்ள கிறிஸ்தவ வாழ்வை எதிர்பார்க்கிறார். அப்படிப்பட்டதான வாழ்வை வாழ்ந்து அவருக்குப் பிரியமாக இருப்போம். கர்த்தர் அதை ஆசீர்வதிப்பார்.

அனுதினமன்னா -

---



## பூண்டு

பூண்டுப் பல்லைப் பாலுடன் அரைத்து பருக்களின் மீது தடவினால் பரு மறைந்து விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றோரம்

கனகன் முத்துவிடம் இன்றைக்கு ஆற்றில் நீந்திக் குளிக்க ஆசையாயிருக்கு போவோமா எனக் கேட்டான். அதற்கு முத்து அதற்கென்ன காசா – பணமா வா போகலாம் என்று சொல்லி இருவருமாக பொரி கடலையும், மிட்டாயும் வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டு ஆற்றை நோக்கி நடந்து சென்றனர். அன்று ஆற்றில் தண்ணீர் சற்று வேகமாய் ஓடிக்கொண்டிருந்தது. எல்லோரும் கரையில் இறங்கிக் குளித்துக் கொண்டிருந்தார்கள். சிறுவர்கள் சற்று துடுக்காகத் துள்ளி விளையாடினார்கள். நீந்துவதில் அதிகப் பிரியம் உள்ளவர்கள். ஆகவே இருவரும் போட்டி போட்டுக் கொண்டு நீந்தினார்கள். அவர்கள் தங்களது திறமையைக் காட்ட தரையில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்கள் கைதட்டி ஊக்குவித்து மகிழ்ந்தார்கள்.

சிறுவர்கள் இருவரும் நட்டாற்றில் நீந்திக் கொண்டிருந்தார்கள். அக்கரை சேர முயன்றார்கள் ஆனால் முடியவில்லை. கைகால்கள் சோர்ந்து போயின. ஆற்றின் நடுவில் வேகம் அதிகம். தண்ணீரை எதிர்த்துப் போக அவர்களால் முடியவில்லை. பாவம்! கீழே மூழ்கி பின்பு சற்று சமாளித்துக்கொண்டு மேலே வந்து சற்று கைகளை அசைத்து ஏதேதோ செய்கின்றனர். தண்ணீர் அடித்துக்கொண்டு போகவே இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டே ஆற்றோடு போனார்கள். முடிவு நெருங்கிவிட்டது என்று தெரிந்ததால் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து திண்டாடிக்கொண்டிருந்தனர்.

அந்நேரத்தில் கரையோரமாக ஒரு பெரியவர் நடந்து போய்க்கொண்டிருந்தார். திடீரென்று இரு சிறுவர்கள் உயிர் போகக் கத்துவதைக் கேட்டார். இரு கரங்கள் தன்னை அழைப்பதைக் கண்டார். பெரியவருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. யோசிக்க நேரமில்லை. உடனே ஆற்றில் குதித்தார், வேகமாக நீந்தினார். நீந்துவதில் அனுபவம் மிகுந்த அந்தப் பெரியவர் சரியான நேரத்தில் சாகப்போன ஒரு சிறுவனது கரங்களைப் பிடித்துக் கொண்டார். அவன் வேறு யாருமில்லை, அந்தப் பெரியவரின் மகன்தான்!

ஐயோ! மகனே! நீயா என்று பதறிக்கொண்டே மகனின் கைகளைத் தோளில் போட்டு கைலாகு கொடுத்தவாறு நீந்தினார். மகனைக் காப்பாற்றிய நிம்மதியோடு நீந்தினார். அடுத்த வினாடியில் ஐயோ! என்னைக் காப்பாற்றுங்கள் என்று அலறிக்கொண்டு ஆற்றோடு போகும் பையனின் அழுகுரல் கேட்டது. திரும்பிப் பார்த்தார் "ஐயோ சாகப் போகிறேனே? என்னைப் பிடியுங்கள் என்ற குரல், யோசிக்க நேரமில்லை. தண்ணீரின் வேகம் அதிகரிக்கிறது. தன்னருமை மகனைக் கைவிட்டால்தான் மற்ற அந்தப் பையனைக் காப்பாற்ற முடியும். யாரைக் காப்பாற்றுவது என்பது கேள்வி. பெற்ற மனம் பித்தல்லவா, தத்தளித்தார். ஆனால் தாமதிக்கவில்லை சட்டென்று தனது ஒரே மகனை விட்டுவிட்டு மற்றவனைப் பிடித்துக் கொண்டார். அவன் யார்பெற்ற மகனோ? அனாதைப் பையன், பெரியவர் அவனது கைகளைத் தனது தோளின் மேல் போடச்சொல்லி மெதுவாக நீந்துகிறார். நீந்தும்போதே தன்னால் கைவிடப்பட்டு தவித்துக் கொண்டு தண்ணீரில் மூழ்கும் தன்னருமை மைந்தனைப் பார்க்கின்றார். தந்தையின் மனம் என்ன பாடுபடும்? கைவிடப்பட்ட மகன் தண்ணீரில் மூழ்கி மாளும் நேரத்தில் இருள் சூழ்ந்துவிட்டது. அலைகள் அவன் தலைக்கு மேல் புரண்டு போகிறது. என்ன செய்வதென்று புரியவில்லை. கடைசி முறையாக தந்தையைப் பார்க்க முயல்கின்றான். ஆனால் தந்தை தன்னைப் பார்க்காமல் தனது நண்பனைக் காப்பதைக் காண்கிறான். தந்தையின் முகம் மறைக்கப்பட்டு போகையில் "அப்பா, அப்பா ஏன் என்னைக் கைவிட்டீர்'' என்று கத்திக்கொண்டே நீரில் மூழ்கி மாழ்கிறான், மறைகிறான்.

கரை சேர்ந்த தந்தை, கரைசேர்ந்த கனகனைப் பார்க்கிறார். கனகனின் கண்களில் கண்ணீர் தாரை தாரையாகப் பொங்கிற்று. "ஏன் ஐயா! உங்கள் மகனைக் கை விட்டீர்கள்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன்னைக் காப்பாற்ற." என்றார். கனகனுக்கு ஒன்றும் புரியவில்லை. பெரியவரின் பேரன்பைச் சிறியவனால் விளங்கிக்கொள்ள முடியுமா?

பரிசுத்த வேதாகமத்தில் யோவான்3:16ல் "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்". தன்னைக் காப்பாற்றத் தனது ஒரே மைந்தனைச் சிலுவையில் கைவிட்ட அன்பு தேவ அன்பு, மாறாத அன்பு என்ற மாபெரும் உண்மையைக் கனகன் கண்டுகொண்டான். அந்தத் தூய அன்புக்குத் தன்னை ஒப்புக்கொடுத்தான். மறக்கவில்லை. மறக்க முடியுமா! கனகன் கடவுளுடைய அன்பை எண்ணி எண்ணிக் கண்ணீர் சொரிந்தவனாக ஆண்டவராகிய இயேசுவுக்காகத் தன் வாழ்வை ஒப்புக்கொடுத்தான்.

இதை வாசிக்கும் அருமையான சகோதரனே! சகோதரியே! இந்தப் பாவ ஆற்றில் அமிழ்ந்து போகும் நிலையில், தத்தளிக்கும் நிலையில் உன் அவலக் குரலைக் கேட்டு உனக்காக தன் குமாரனாகிய இயேசுவைப் பலியாகக் கொடுத்து உன்னை மீட்கச் சித்தமானார். உன் பாவங்களைக் கழுவி சுத்திகரிக்கும் வல்லமை அவருடைய இரத்தத்தில் உண்டு. (1யோவான்1:7,8,9) "அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்." உன்னை மீட்கும் பொருட்டாகத் தன் ஜீவனைக் கொடுத்த அவரிடம் உன் இருதயத்தைக் கொடு. உன் வாழ்வை மாற்றுவார். உன் பாவத்தை மன்னிப்பார், உன் கண்ணீரைத் துடைப்பார். சமாதானத்தையும், சந்தோஷத்தையும் தருவார்.

மேய்ப்பன் -



## சிகரட் பிடித்தால் மூளைக்கு பாதிப்பு

புகை பிடிப்பது உடல் நலத்திற்கு தீங்கானது. புகை பிடிப்பதால் நுரையீரல் பாதிக்கப்பட்டு கேன்சர், காசநோய் போன்றவை உருவாக வாய்ப்பு உள்ளது. இந்த விபரம் அனைவருக்கும் தெரிந்ததுதான்.

சிகரட் பிடிப்பது மூளையும் பாதிக்கப்படுகிறது என்ற அதிர்ச்சி தரும் தகவல் தற்போது வெளியாகியுள்ளது. இதை இந்திய தேசிய ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. புகையில் உள்ள நச்சுத் தன்மையுள்ள பொருட்கள் ரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்களை கோபமூட்டச் செய்கின்றன. அவை மத்திய நரம்பு மண்டலத்தில் உள்ள சுகாதாரமான "செல்"களை தாக்குகின்றன. இதனால் நரம்பு மண்டலத்தில் பாதிப்பு ஏற்பட்டு உடலில் பலவித நோய்கள் உருவாகும். இதன் ஒரு பகுதியாக மூளையில் உள்ள "மைக் ரோக்லியா" என்ற செல்களும் பாதிக்கப்படுகின்றன. இது மூளையும் பாதிக்கிறது.



ஒருவர் :ரொம்ப நாளா உன்னோட வீட்டுக்கு வரனும்னு ஆசைப்படுறேன். ஆமா ஓ வீடு எங்க இருக்கு

மற்றவர் :அதுவா பேங்ல அடமானத்துல இருக்கு

ஒருவர்:"என்னங்க கலியாணத்துக்கு வந்துட்டு மொய் எழுதாம போறீங்க?"

மற்றவர்: "எனக்கு எழுதப் படிக்கத் தெரியாதுங்க... அதுதான் எழுதல"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜாலி சந்தோஷம் எங்கே?

ஒரு நாள் காலையில் அப்பா எழுந்து காபி குடிக்கக் கீழே இறங்கி வந்தார். அப்பொழுது அவர் மனைவியும் வந்தாள். அப்பொழுது கணவன் மனைவியிடம் இன்னிக்கு ஞாயிற்றுக்கிழமை எங்கேயாவது ஜாலியாக, சந்தோஷமாக போகலம்னு நினைக்கிறேன் பொதுவாக எல்லா ஞாயிறும் வேலை இன்னிக்கு வேலை இல்லை என்றான். உடனே மனைவி பிள்ளைகளைப் படுக்கையிலிருந்து எழுப்பி அப்பா ஜாலியாக எங்கேயாவது போகலாம் என்றார். எழும்புங்க எழும்புங்க போகலாம் என்று சொல்லி அவர்களை எழுப்பிக் கொண்டு கீழே வந்தாள்.

அப்பா கேட்டார் இன்னிக்கு ஜாலியாக, சந்தோஷமாக எங்கே போகலாம் சொல்லுங்க என்றார். உடனே மனைவி என்னங்க நம்ம மூத்தவன் பொறந்த நாளே அவனைக் கோவிலில கொண்டு வந்து மொட்ட போடுறதா வேண்டிக்கிட்டேன். உங்களுக்கும் தான். ஆனா நீங்க ஒத்து வரலை. இப்போ பத்து வருடமாகுது இன்னும்தான் அதை செய்யல. இப்ப நாம கோவிலுக்குப் போய் அதை செய்திடலாம் என்றாள்.

உடனே மகன் சொன்னான் அதெல்லாம் முடியாது அப்பா ஜாலியாக எங்கே போகலாம் என்னு தான் கேட்டார். கோவிலுக்கு நாங்க வரல. நீச்சல் தடாகத்துடன் உள்ள பார்க்குக்கு போகலாம் என்றான். உடனே அவன் தங்கை அது சரியாகாது. நீ மட்டும் ஜாலியாக மாத்திரம் இருக்கலம்னு நினைக்கிறாய். நாம் ஒரு ரெஸ்ரோறன்ருக்குப் போய் நன்றாக சாப்பிட்டு விட்டு சினிமாவுக்குப் போய் வரலாம் என்றாள்.

உடனே தாய் சொன்னாள் இதுக்குத்தான் நான் சொன்னேன் கோயிலுக்கு போய்ட்டு வரலாம்னு நா சொல்றத யார்தான் கேக்கறா இந்த வீட்டில என்றாள். இப்படியாக வாக்குவாதம் வந்தது. உடனே தகப்பன் ஒரு இடமும் போறதில்லை என சத்தமிட்டுக் கொண்டு வீட்டின் மாடிக்கு ஏறிச்சென்றார்.

தாய் பிள்ளைகளைப் பார்த்து அந்தா வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிற்று என்றாள். மேல் மாடி அவளுக்கு முருங்கை மரம் போல் தெரிந்தது. அவள் பிள்ளைகளிடம் எப்போதாவது ஒரு முறைதான் இப்படி வெளியில போற சந்தர்ப்பம் கிடைக்கிறது அதுவும் பாழாக்கி விட்டீர்கள். சரி நீங்கள் போய் அப்பாவை சமாதானப்படுத்தி அழைத்து வாருங்கள் என்றாள். அவர்களும் மேலே சென்று அப்பாவின் கைகளைப் பிடித்து அப்பா! அப்பா! வாங்க நாம போகலாம் என்று அழைத்தனர். உடனே அவர் சரி...சரி போய் குளித்து சீக்கிரமாய் புறப்படுங்கள். காரில் செல்லும் போது நாம் பேசி எங்கே போவது என்று தீர்மானிப்போம் என்றார். யாவரும் ஆயத்தமாகி கீழே வந்து வாசலில் ஆயத்தமாக வந்து நின்றார்கள்.

அப்பா காரில் ஏறினார். மகன் காரின் முன்பக்க ஆசனத்தில் ஏறி உட்கார ஆயத்தமானான். அப்போது தங்கை இல்லை நான் தான் முன்னே இருப்பேன் என அவள் சொன்னாள். இல்லை பொம்பளங்க எல்லாம் பின்னால இருங்க நாங்க ஆம்பளங்க முன்னால இருக்கிறோம் என்றான். அதற்குத் தங்கை நான் கொஞ்சக்காலம் தான் உங்க கூட இருக்கப் போகிறேன். நான் எப்பவோ இன்னொரு வீட்டுக்குப் போகவேண்டியவள் தானே அதுவரை அப்பாவோட முன்னால் இருக்கிறேன். என்றாள். அப்பா முன் கண்ணாடி வழியாக பின்னாகப் பார்த்தார்.

மனைவியோ தனக்குள்ளாக நீங்கள் பின்னாக உட்காருங்கள் அம்மா முன்னால் இருக்கட்டும் என்று அப்பா ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாம் என நினைத்தாள். இதற்குள்ளாக அண்ணனும் தங்கையும் வாய்த்தர்க்கம் உண்டாகி கைகலப்பு உண்டாயிற்று.

உடனே தாய் சொன்னாள் ஏண்டா இப்படி வெளியில மானத்தை வாங்குறாய்? நாலு பேர் பார்த்தா என்ன சொல்லுவார்கள் என்றாள். இதுக்குத்தான் நான் சொன்னேன் கோயிலுக்கு போலாமென்னு கேக்கல என்றாள். இவர்களுடைய ஜாலி,சந்தோஷம் எங்கே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலிலும் இல்லை, பார்க்கிலும் இல்லை, சினிமாவிலும் இல்லை, காரிலும் இல்லை. தங்களுடைய மானம் என்பது வீட்டுமானம் வேறு, வெளிமானம் வேறு என இரண்டு வகையாக வைத்திருக்கிறார்கள். உண்மையில் ஜாலி, சந்தோஷம் எங்கே?

எது ஜாலி, சந்தோஷம் என்று தெரியாமல் ஏதேதோ எல்லாம் ஜாலி, சந்தோஷம் என நினைத்து மனிதன் ஓடுகிறான். ஒருவன் பெரிய வீடு வாங்கி வாழ்ந்தால் தானும் ஒரு பெரிய வீடு வாங்கி வாழ வேண்டும் என ஆசைப்பட்டு அதில் தான் ஜாலி, சந்தோஷம் என நினைத்து தனது தகுதிக்கு மேலாக அதனை வாங்கி அதற்கு மோட்கேஜ் கட்டுவதற்கு பணம் தேவை என இரண்டு, மூன்று வேலை செய்ய முற்படுவார்கள். இதனால் வீட்டில் படுக்கவும் நேரமில்லை, குடும்பத்துடன் நேரத்தைச் செலவிட முடியாத நிலை, சரியான தூக்கமின்மையால் எரிச்சல், கோபம், சண்டை, வாக்குவாதம், சரியாகக் குடும்பத்துடன் நேரத்தைச் செலவிடாததினால் கணவன் மனைவி உறவில் விரிசல் அதனால் சந்தேகம், விவாகரத்து எனப் பல பிரச்சனைகள் ஒன்றின் பின் ஒன்றாக வருகிறது. ஜாலி, சந்தோஷம் எங்கே? ஜாலியாக வாழ வேண்டும் என்ற ஆசை துன்பமாக மாறிவிடுகிறது.

மானம், மரியாதை, நாலுபேர் என்ன சொல்வார்கள் என்று வாழும் வாழ்க்கை அது ஒரு சந்தோஷமான ஜாலி வாழ்க்கையல்ல. நாலுபேர் நாம் சந்தோஷமாக இருக்கிறதாகக் காணவேண்டும் என்ற போலியான சந்தோஷ நாடகம் இது எல்லாம் தம்மைத்தாமே ஏமாற்றும் வாழ்வு. பரிசுத்த வேதாகமத்தில் 1தெசலோனிக்கேயர் 5:16ல் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பிலிப்பியர் 4:4ல் "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள் சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்கிறேன்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. மனிதன் சந்தோஷமாக வாழ வேண்டுமென்பது தேவனுடைய விருப்பம். சந்தோஷமாக வாழ வேண்டும் என்று நீ விரும்புவாயாக இருந்தால் உன் இருதயத்தைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடு.

ஜாலி, சந்தோஷம் என்பது மனிதனுக்குள் மறைந்திருக்கிறது. அதை அவனால் கண்டு கொள்ள முடியாதவனாக அதனைத் தேடி அலைகிறான். முதலாவது தேவனுடைய ராஜ்சியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் என மத்தேயு6:33ல் சொல்லப்பட்டிருக்கிறது.

அருமையான சகோதரனே! சகோதரியே! நீ தேடும் சந்தோஷம், ஜாலி எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ள விரும்புகின்றாயா? உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும். இயேசுவை உன் வாழ்வில் ஏற்றுக்கொண்டு ஒரு வார்த்தை நீ அவரிடம் இவ்விதமாகக் கேள் "அன்பான இயேசு சுவாமி என் வாழ்வை உம்மிடத்தில் ஒப்புக்கொடுக்கிறேன். என் வாழ்வின் காணப்படும் துன்பம், துக்கம், கண்ணீர், கவலை, வேதனை எல்லாவற்றையும் நீக்கி என் வாழ்வில், என் குடும்ப வாழ்வில் அமைதி சமாதானம், சந்தோஷம் எல்லாவற்றையும் பெறுவதற்கு நீர் என் உள்ளத்தில் வாரும். நீர் எனக்குள் வந்து வாசம் செய்யும் போது என்வாழ்வில் இவைகள் எல்லாம் கூடக் கொடுக்கப்படும் என விசுவாசித்து என்னை உம்மிடம் ஒப்புக்கொடுக்கிறேன். இப்பொழுது முதல் என்வாழ்வை நீர் பொறுப்பெடுத்து வழிநடத்தும் ஆமென்".

மேய்ப்பன் -

**இறைவனுக்குரியவைகளைத் தேட நீ வேகமாயிருந்தால்**
**உனக்குரியவைகளைத் தேட தேவன் தாமதமாக இருக்கமாட்டார்.**

## பல்வலி

ஒரு பாத்திரத்தில் தண்ணீரை நன்றாகக் கொதிக்க விட்டு பின் சுமார் 20, 30 கொய்யா இலைகளைப் போட்டு மீண்டும் கொதிக்கவிடவும். இரண்டு நிமிடம் கழித்து அந்த நீரை வாயில் ஊற்றி பல்லில்படுவது மாதிரி கொப்பளிக்க வேண்டும். தினமும் இதே மாதிரி 3 முறை செய்தால் பல்வலி பூரண குணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE LORD'S DAY COVENANT

"On the Lord's Day I was in the Spirit" (Revelation 1:10)

"If you keep your feet from breaking the Sabbath and from doing as you please on my holy day, if you call the Sabbath a delight and the lord's holy day honorable, and if you honor it by not going your own way and not doing as you please or speaking idle words, <u>then</u> you will find your joy in the LORD, and I will cause you to ride on the heights of the land and to feast on the inheritance of your father Jacob" The mouth of the LORD has spoken.

(Isaiah 58:13, 14)

The beloved apostle John was exiled to a barren island called Patmos, by the wicked Roman emperor Domitian in A.D 95. John was ninety years old at that time, and he had faithfully served his Lord for almost sixty long years. He was old, tired and isolated from fellow believers. He has a major lesson to teach us of how we should view and use the Lord's Day, the Sunday. Today tragically there is grave abuse of the Lord's Day and how grieved the Lord must be of us. So let's make a **covenant** to honor the Lord's Day, and in so doing we will be honoring the Lord Jesus Christ who loves to reveal Himself in a unique way to His people on that special day that is to be set apart for Him and His glory.

I will be controlled by the Spirit of God on the **LORD'S DAY.**

I will be punctual when I come to the **LORD'S HOUSE**. I will be alert and vigilant.

I will joyfully sing the **LORD'S PRAISES.**

I will listen with rapt attention to the **LORD'S MESSAGE** and seek to apply it to my life.

I will be reconciled to all of the **LORD'S PEOPLE** and seek to maintain regular fellowship with them.

I will obediently give the **LORD'S TITHE** to the **LORD'S CHURCH.**

I will whole-heartedly do the **LORD'S WORK** as unto Him for His glory alone.

I will hold myself accountable to the **LORD'S SHEPHERDS** for my spiritual growth and development.

I will faithfully partake at the **LORD'S SUPPER**

I will use the whole day to fulfill the **LORD'S PURPOSES** alone.

PASTOR BENJAMIN DEVADASON
bdevadason@hotmail.com

**இறைவனோருள்ள உறவைக் குறித்து இன்று நீ கவலைப்பட்டால் நாளையதினக் கவலைகள் தானாக நகர்ந்து போகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் பாவிகளா? இல்லையேல் யார் பாவிகள்?

பாவிகள் என்ற வார்த்தையை பலர் விரும்புவதில்லை. கிறிஸ்தவ பிரசங்கங்களில் தான் இந்த வார்த்தை அதிகமாக வருகின்றது. எனவே தான் சிலர் எதற்கெடுத்தாலும் பாவிகள் என்று கத்துகிறார்களே என அதிருப்தி அடைவதுண்டு. ஒரு சிலரை பாவிகள் என்று அழைத்தால் பரவாயில்லை ஆனால் இவர்கள் எல்லோரையும் பாவிகளாகவே எண்ணுகிறார்களே என்று எரிச்சலடைவதுண்டு.

எனவே இந்த பாவிகள், பாவம் என்ற பதங்களைக் குறித்து நாம் சற்று ஆராய்ந்து பார்ப்போம். கிறிஸ்தவ புத்தகங்களிலும் பிரசங்கங்களிலும் பாவம், பாவிகள் என்ற சொற்கள் அதிகமாக உபயோகிக்கப்படும்போது அது மற்றவர்களை மிக மோசமானவர்கள் என்றோ அல்லது அவர்களை குற்றப் படுத்துவற்காகவோ அதை குறிப்பிடுகின்றனர் என்று எண்ணிவிடக்கூடாது.

பாவி என்றால் அது ஒரு மனிதன் இன்னொரு மனிதனுடைய பார்வையிலே தெரிகின்ற ஒரு தோற்றமல்ல. பாவிகள் என்றால் மனிதர்கள் பரிசுத்தமான கடவுளின் பார்வையில் எப்படித் தோன்றுகிறார்கள் என்பதைக் குறிப்பதாகும். உலகில் ஏராளமான மனிதர்கள் நம்முடைய பார்வையில் பாவிகளாகவோ மோசமானவர்களாகவோ தோன்றுவதில்லை. அவர்கள் நம்முடைய பார்வையில் நல்லவர்களாக, மதிக்கத்தக்கவர்களாக, உயர்ந்த பண்புடையவர்களாக காட்சியளிப்பார்கள், ஆயினும் அவர்கள்கூட இறைவனின் பார்வையில் பாவிகளே.

இறைவனுடைய பார்வையில் அவர்கள் ஒப்பிடப்படும்போது அவர்கள் பாவிகளாக தோன்றுகிறார்கள். ஏனென்றால் கடவுளின் பார்வையில் எல்லாரும் வழிதப்பி ஏகமாய்க் கெட்டுப்போனார்கள் என்ற நிலையில் உள்ளனர். அதையே பரிசுத்த வேதம் "எல்லாரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்கள் ஆகிப் போனார்கள்" என்று கூறுகிறது.(ரோமர் 3:12,23)

ஒரு புகைப்பட கமிரா முன் ஒருவர் தன்னை நன்கு அலங்காரம் செய்து கொண்டு நின்றால் அந்த நபரை மிக அழகானவராகவே அந்த கமரா புகைப்படம் எடுத்துக் கொடுக்கும். ஒருவருடைய வெளித்தோற்றத்தை அப்படியே படமெடுத்துக் காட்டும் தன்மை அதற்கு உண்டு. அதேவேளை அதே நபர் ஒரு எக்ஸ்ரே கமரா முன்பாக நின்று படமெடுத்தால் அங்கே வரும் படம் புகைப்படக் கமராபோல அழகாக தோன்றாது. அதுஅம்மனிதனின் உள்நிலையின் அலங்கோலங்களை அப்படியே படமெடுத்து காண்பிக்கும். அங்கே அந்த படம் பார்க்க நன்றாயிராது.

அதுபோலவே ஒரு மனிதனின் வெளித்தோற்றம் பார்வைக்கு அழகாக இருந்தாலும் அவன் உள்தோற்றம் அதற்கு மாறுபட்டதாக இருக்கும் . மனிதன் ஒருவனுடைய வெளித்தோற்றத்தையே பார்க்கின்றான். வேதம் சொல்லுகிறது: "மனிதன் முகத்தைப் பார்க்கின்றான். இறைவனோ இருதயத்தை பார்க்கிறார்". (1சாமுவேல் 16:7) ஆம் இறைவனால் மட்டுமே மனிதனுடைய உள்ளத்தின் நினைவுகளை அறியமுடியும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த காலங்களில் யூதர்களில் ஒரு பிரிவினரான பரிசேயர் எனும் ஒருகூட்ட மக்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் மத சடங்காச்சாரங்களில் மிகவும் பக்தி வைராக்கியமுள்ளவர்கள். அதிகம் கனம் பெற்றவர்களாக மக்களுடைய மனதில் இடம் பெற்றிருந்தார்கள். இவர்களுடைய வெளியழகைக் கண்டு மக்கள் இவர்கள்மேல் அதிக மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார்கள். ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இவர்களைக் கண்டபோது மாயக்காரரே! என்று அழைத்தார். இவர்கள் குருடருக்கு வழிகாட்டும் குருடர்கள் என்று கூறினார். மட்டுமல்லாமல் தனது சீஷர்களைப் பார்த்து இவர்களுக்கு எச்சரிக்கையாக இருக்கும்படி கூறினார்.

ஏனெனில் இவர்களுடைய வாழ்க்கை அவருடைய பார்வையில் மாய்மாலமானதாக காட்சியளித்தது. மக்களால் இவர்களுடைய உள்ளழகை காணமுடியவில்லை. மக்கள் இவர்களை அதிக பக்திமான்கள் என்று நம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்தனர். ஆன்மீக பெரியார்களாக அழைக்கப்பட்டனர். ஆண்டவர் பக்தியாய் வாழ்ந்த பரிசேயர் கூட்ட மக்களைப் பார்த்து கூறினார். வேதம் சொல்லுகிறது "நீங்கள் மனுஷர்முன்பாக பக்திமான்களாக காட்டுகிறீர்கள். இறைவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கின்றார் மனுஷனுக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுவது இறைவன் பார்வையில் அருவருப்பாயிருக்கின்றது." லூக்கா16:15.

ஆகையால் அன்பான சகோதரனே! சகோதரியே! மற்றவர்களைப் பார்த்து பாவி என்று அழைப்பதை விட்டு உன்னை இறைவனுக்கு முன்னால் நிறுத்திப்பார். உன் உள்ளழகை இறைவன் உனக்கு காண்பிப்பார். நீ ஒரு பாவியென நீயே உன்னை அடையாளம் காண்பாய் உலக மனிதர்கள் உன்னை மதிப்பிட தேவையில்லை. இறைவனே உன்னை மதிப்பட தகுதிவாய்ந்தவர். அவருடமிருந்து நற்சாட்சியை பெற்று உண்மையுள்ள மனிதனாக வாழ். அதுவே இறைவனை பிரியப்படுத்தும். உன் வாழ்க்கை ஆசீர்வதிக்கப்படும்.

"உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்" நீதிமொழிகள் 28:20

ஏழாலையூரான்-

---

## இரசாயன மாற்றம்

இரவில் தூங்கும்போது படுக்கை அறைகளில் குறைந்த ஒளியை உமிழும் இரவு நேர விளக்குகளைப் பயன் படுத்துகிறோம். இத்தகைய விளக்குகளால் பக்க விளைவுகள் ஏற்படும் என அமெரிக்காவில் உள்ள ஒளியோ நரம்பியல் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இரவு நேரத்தில் மங்கலான அளவில் ஒளி இருந்தால்கூட மூளைக்குள் இரசாயன மாற்றங்கள் ஏற்படுவதுடன் மூளையின் கட்டமைப்புக்களையும் மாற்றிவிடும் எனக் கூறியுள்ளார். குழந்தைகளின் படுக்கை அறைகளில் இத்தகைய விளக்குகள் தேவையில்லை என்று அறிவுறுத்தியுள்ளனர்.

---

## முதன் முறையாக இந்த சஞ்சிகையை படித்துக் கொண்டிருக்கிறீர்களா?

1- இந்த சஞ்சிகை எப்படி உங்களுக்குப் பிரயோஜனமாய் இருந்தது என எங்களுக்கு எழுதுங்கள்.

2- மற்றவர்களுக்கு இந்த சஞ்சிகையை அறிமுகப்படுத்துங்கள்.

3- இதனைத் தொடர்ந்து பெற விரும்பினால் தொலைபேசி வாயிலாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ உங்கள் தெளிவான முகவரியை தெரியப்படுத்துங்கள்.

4- இந்த சஞ்சிகை ஊழியத்திற்காக ஜெபியுங்கள்.

5- இந்த ஊழியத்தைத் தாங்குங்கள். உங்கள் மனதில் ஏவப்பட்டபடி உதவுங்கள்.

6- உங்கள் கருத்துக்கள், ஆக்கங்களை எழுதி அனுப்புங்கள். தகுதியானவை பிரசுரிக்கப்படும். முடிவு வெளியீட்டுக் குழுவினுடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விவேகானந்தர் அறிந்த கிறிஸ்து



சுவாமி விவேகானந்தர் கிறிஸ்துவைக் குறித்தும் அவர் தம் போதனைகளைக் குறித்தும் ஞானதீபம் என்னும் நூலில் கூறியிருக்கும் கருத்துக்களில் சிலவற்றைப் பார்க்கலாம்.

1- கீழை நாட்டைச் சேர்ந்தவனாக நான் நாசரேத்து நல்கிய இயேசுநாதரை இறைஞ்சுவதாயிருந்தால் அவரைக் கடவுளைத் தவிர வேறுமுறையில் வழிபட முடியாது என்பதே (ஞானதீபம் சுடர்2 பக்கம் 153)

2- இயேசு கிறிஸ்துவை மனித உருக்கொண்ட தெய்வத்தை நாம் தெய்வமாக வணங்க வேண்டும். மனித எண்ணத்தால் எண்ணுகிற எந்தக் கடவுளைக் காட்டிலும் மிக உயர்ந்த நிலையில் இருப்பவர் இயேசுவே. இயேசுவை ஒரு மனிதர் என்று சொல்லுகிறவர்கள் தெய்வ நிந்தனையென்ற குற்றம் புரிந்தவர்களாவர். (ஞானதீபம் சுடர்7: பக்கம்270)

3- சிலுவை மீதிருந்த சான்றோரை நினைப்பீர்களாக தம்மைச் சிலுவையில் அறைந்தவர்கள் மீது இரக்கங்காட்டினார். ஒவ்வோர் அவமானத்தையும் இடும்பையும் பொறுத்தார். எல்லாப் பாவச்சுமைகளையும் தாமே ஏற்றார். அல்லலுறும் மக்களே! பெருஞ்சுமையைத் தாங்கி நிற்கும் வையகத்தீரே! வாருங்கள் நான் உங்களுக்கு அமைதியை அளிக்கிறேன் என்றார்.

நம் வாழ்வின் முறையைக் காட்டிலும் அவர் அவ்வளவு உயர்ந்த நிலையில் திகழ்ந்து நிற்கின்றார். பாருங்கள் என் கன்னத்தில் ஒருவன் அடித்த அத்தருணத்தே என்னை திரும்பி அவனை அடிக்கிறது பளீர் என்ற சத்தம் வெடித்து எழுகின்றது. சிலுவையில் அறையப்பட்ட அந்தப் பெருந் தகையாரின் சிறப்பையும் அருளையும் நான் எப்படி அறிய முடியும். (ஞானதீபம் சுடர் 2 பக்கம் 372)

4- கிறிஸ்துவானவர் தொட்டவுடனே மனிதனுடைய ஆன்மாவே மாறுதல் அடைகின்றது. கிறிஸ்துவைப்போல் மாறிவிடுவான். அவனது வாழ்க்கை முழுவதும் புனிதமாகி விடும். நல்ல ஆன்மீக சக்தி அவனது உடலிலுள்ள மயிர்க்கால்கள் தோறும் பொசிந்து எட்டிப் பார்க்கும். (ஞானதீபம் சுடர் 4 பக்கம் 500)

5- அவர் அருளிய மெய்ச்சொற்கள் என்றும் நிலைக்கும். அவர் ஒரே பார்வையில் குணப்படுத்தியதை மறந்து போகலாம். ஆனால் அவருடைய அறிவுரைகள் மறக்கப்படாதவை. தூய்மை வாய்ந்த இதயம் உள்ளவர்கள் பாக்கியசாலிகள். இந்தச் சொற்களே சக்திக் கருவூலமாகும். இவைகளே இயேசுவிற்கு இருந்த சக்திகளும் அவர் பிறர்க்கு வழங்கிய சக்திகளுமாகும். திட்டமான தூய்மைச் சக்தியைப் பற்றி என்னென்று இயம்புவது. (ஞானதீபம் சுடர் 4 பக்கம் 501)

6- இயேசுநாதர் உபதேசங்கள் இக்காலத்திற்குப் பொருந்தாது என்பது நியாயத்துக்கு முரண்பாடானது. அந்த உபதேசங்கள் இக்காலத்துக்கு பொருந்தாததென்று சொல்வது கேலிக்குரியதாகும். (ஞானதீபம் சுடர் 3 பக்கம் 211)

7- தீமையைத் தீமையால் எதிர்க்காதே என்ற இயேசுநாதரின் போதனையை இந்த உலகம் கடைப்பிடிக்கவில்லை. அதனால் தான் இவ்வுலகம் இவ்வளவு தீமை உள்ளதாக இருக்கிறது. (ஞானதீபம் சுடர் 7 பக்கம் 119)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8- மலையின் மேல் செய்த சொற்பொழிவு அவரை ஏற்ற ஐரோப்பாவை வாழ வைத்தது. மனித ஆன்மா உண்மையைத் தழுவிப் பொய் புனைந்ததை உதறித் தள்ளிவிட்டது. (ஞானதீபம் சுடர் 4 பக்கம் 485)

9- இயேசு நாதர் பன்னிரு செம்படவரை விட்டுச்சென்றார். எனினும் அந்த ஒரு சிலர் ரோம சாம்ராஜ்ஜியத்தை அதிர்ந்து வெடிக்கச் செய்தனர். (ஞானதீபம் சுடர் 1 பக்கம் 485)

10- இவ்வையகத்திலே மிகத்தூய கிறிஸ்துவர்களை தாமஸ் என்னும் சீடர் இயேசு நாதருக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின் இந்தியாவில் நிலை நாட்டினார். ஆங்கிலோ ஸாக்ஸன் இனத்தார் தம் உடல்களில் வண்ணம் பூசிக்கொண்டு குகைகளில் உறைந்து வந்த நாகரீகமற்ற மனிதர்களாய் இருந்த வந்தபோது இந்தியாவிலிருந்த கிறிஸ்துவர்கள் முப்பது லட்சம் ஆவர். (ஞானதீபம் சுடர் 1 பக்கம் 409)

11- இந்தியாவுக்குக் கிறிஸ்தவ ஞானப்பணியாளர்கள் வேண்டும், நூற்றுக் கணக்கிலும், ஆயிரக்கணக்கிலும் அவர்கள் திரளட்டும். தூய வாழ்வின் வரலாற்றை எங்களுக்கு எடுத்து ஓதுவீர்களாக. அவர் ஞான நன்மொழி எங்கள் சமூகத்தின் இருதயத்தை ஊடுருவிப் பாயட்டும். இயேசு நாதரைப் பற்றி ஒவ்வொரு சிற்றூரின் மூலை முடுக்குகளிலும் பிரச்சாரம் செய்யுங்கள். (ஞானதீபம் சுடர் 2 பக்கம் 188,199)

12- சுவாமி விவேகானந்தரால் வியந்து கூறப்பட்ட இயேசுநாதரை இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்ள ஏன் தாமதம்? இயேசு கிறிஸ்துவே நமது பாவங்களைப் போக்கும் கிருபாதாரபலியாய் நமக்குப் பதிலாய்ச் சிலுவையின் மீது தம்மையே தியாகப்பலியாய் ஒப்புக்கொடுத்து மரித்து மூன்றாம் நாள் உயிருடனெழுந்து விண்ணுலகம் எய்தி இன்றும் உயிருடன் ஜீவிக்கிறார். உண்மையாய்த் தமது பாவங்களுக்காக வருந்தி அவரிடம் மன்னிப்புக்கோரி வேண்டுதல் செய்து அவரில் விசுவாசம் வைப்பவரின் பாவங்களை மன்னித்து, இரட்சித்து இறுதியில் தம்முடன் வாழும் மோட்சானந்த பாக்கியத்தை அருளுவார். ஆகவே இன்றே அவரை உங்கள் ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ளவும், அவராலே அன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படி வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை. (அப்போஸ்தலர் 4:8)

நன்றி (ஞானதீபம்)

**முதியவரின் ஆலோசனை**

ஒரு முதியவரின் பேரனுக்கு அதிக கோபம் வரும். இதனால் அவன் தன் கையில் அகப்பட்டதை எடுத்து வீசுவான். இதனால் அந்த முதியவர் தன் பேரனுக்கு ஒரு ஆலோசனை சொன்னார். உனக்குக் கோபம் வரும் போதெல்லாம் சுவரிலே ஒரு ஆணியை அடித்து விடு என்றார். அப்படியாக அவன் 50 ஆணிகளை அடித்தான். அதை அவன் பார்த்து முதியவரிடம் சென்று இனி நான் கோபிக்க மாட்டேன் என்றான். அப்பொழுது முதியவர் அவனிடம் எப்போதெல்லாம் கோபிக்காமல் விடுகிறாயோ அப்போது ஒவ்வொரு ஆணியாகக் கழற்றிவிடு என்றார். அப்படியாக அவன் எல்லா ஆணிகளையும் படிப்படியாகக் கழற்றி விட்டு முதியவரிடம் வந்தான். அவர் தன் பேரனாகிய வாலிபனிடம் சரி அந்த ஓட்டைகளை அடைக்க முடியுமா? என்று கேட்டார். அவன் இல்லை என்றான். இதே போலத்தான் கோபத்தினால் உண்டான சேதத்தை அடைக்க முடியாததாகி விடுகிறது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்யான மனந்திரும்புதல் நடைபெற்றதற்கு என்ன அடையாளம்? தினமும் தற்பரிசோதனை செய்து பாருங்கள்!

லூக்கா 7:38 செய்த பாவத்தினைக் குறித்த உணர்வுகள் கண்ணீரை வரவழைக்கும்

லூக்கா 7:43 நன்றிப்பெருக்கு ஆண்டவரை அதிகம் நேசிக்கச்செய்யும்

லூக்கா 19:8 அநியாயமாய் வாங்கினவைகளை, களவாய் எடுத்தவைகளைத் திரும்பக் கொடுக்கும்.

அப்போ 16:33 தன்னால் காயப்பட்டவரின் காயங்களைத் தானே கழுவிவிடும்.

அப்போ 19:19 தவறாய்ப் பயன்படுத்தப்பட்ட புத்தகங்கள்,பொருட்கள் எரிக்கப்படும்.

அப்போ 16:15 வீட்டின் கதவுகளைத் தேவ மக்களுக்கு, தேவனுடைய காரியத்திற்கு என்று வலிய முன்வந்து திறந்து கொடுக்கும்.

அப்போ 2:46 மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும், தேவ மக்களோடும் இணைந்து செயல்பட்டு ஐக்கியம் கொள்ளும்.

அப்போ 9:20 கர்த்தரை அறிவிக்கத் துடிக்கும்

1பேது 2:3 புதிதாகப் பிறந்த குழந்தையினைப் போல தேவ வசனத்திற்கு ஏங்கும்

அப் 8:36 தேவ கட்டளைகளை நிறைவேற்றத் தீவிரம் காட்டும்

அப் 9:6 அவருடைய சித்தம் தன் வாழ்வில் வெளிப்படவும், அதனை நிறைவேற்றவும் வேண்டும் என்ற துடிப்பில் சம்பூரணமாய் அர்ப்பணிக்கும்.

அப் 28:10 தங்களுக்குத் தேவனைக் காண்பித்தவர்களை மரியாதை செய்யவும், அவர்களுடைய தேவைகளைச் சந்திக்கவும் தயக்கம் காட்டாது.

கலா 4:15 ஏன் கண்களைப் பிடுங்கிக் கொடுக்கக்கூட ஆயத்தமாயிருக்கும்.

1தெச 1:8 அவர்களுடைய புதிய வாழ்வினைக் குறித்து தூரத்தில் உள்ள ஜனங்களும் அறிந்து கொள்வார்கள்.

எபி 10:33 உபத்திரவத்தினை சகிக்கும் குணம் நிரம்பி வழியும்

### நெல்லிக்காயில் விற்றமின் ' சி '

நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானியான லைன்ஸ்பாலிங் என்பவர் விற்றமின் சி யைத் தொடர்ந்து உண்பவரின் ஆயுள் மொத்தத்தில் நான்கிலிருந்து ஆறு ஆண்டுகள் வரை கூடும் என்று கூறுகின்றார்.

மேற்கண்ட கருத்தை அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் நிரூபித்து உள்ளனர். அவ் விற்றமின் சி பிரதானமாக உள்ள நெல்லிக்கனியில் புரதம், கொழுப்பு, சுண்ணாம்புச்சத்து, விற்றமின் ஏ போன்ற சத்துக்களும் அடங்குகின்றன.

நன்றி சுகவாழ்வு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டுப்பூச்சி கற்றுத்தரும் பாடம்



சிறுவன் ஒருவன் பட்டுப்பூச்சி தனது கூட்டிலிருந்து வெளிவருவதை ஆர்வத்தோடு கவனித்துக் கொண்டிருந்தான். கூட்டிலிருந்து வெளிவரும்படி அந்தப் பட்டுப்பூச்சி நெளிந்தும் வளைந்தும் தனது சரீரத்தை அசைத்துக் கொண்டு வெளியில் வருவதற்கு அது அதிக பிரயாசப்பட்டுக் கொண்டிருந்தது அந்தப் பட்டுப்பூச்சிக்கு எப்படியாவது உதவிசெய்ய வேண்டுமென்ற எண்ணம் சிறுவனுக்கு வந்தது. எனவே அவன் தனது மென்மையான கைகளினால் அந்தக் கூட்டை மெதுவாகப் பிரித்து எளிதாகப் பட்டுப்பூச்சியை வெளியே எடுத்தான். ஆனால் அந்தப் பட்டுப் பூச்சியினால் பறக்க முடியவில்லை. அதன் இறகுகளில் வலிமை இல்லை. பறக்க முடியாதபடி பரிதாபமாகக் கீழே விழுந்தது! எறும்புகள் பிடித்துக் கொண்டது.

கூட்டுக்குளிருந்து வெளிவர பூச்சி எடுக்கும் முயற்சியும், போராட்டமுமே அதன் தசைகளையும், நரம்புகளையும், இறக்கைகளையும் பெலமுள்ளதாக்கி உயரங்களில் பறக்கச் செய்கிறது என்பதை அந்தச் சிறுவன் அறிந்தான்.

இன்றும் நமது வாழ்வில் எத்தனையோ பாடுகள், வேதனைகள், துன்பங்கள் வரும் போது ஐயோ! ஏன் எனக்கு இவைகளெல்லாம் நேரிடுகிறது. என்று அங்கலாய்த்து சோர்ந்து போய்விடுகிறார்கள். அப்படிச் சோர்ந்து போகும் போது மனிதன் உளச்சோர்வு, மனஅழுத்தம் உள்ளவனாக மாறி விடுகிறான். இப்படியான நிலைகள் வாழ்வில் தோன்றும் போது சோர்ந்து போகாதிருங்கள். இவைகளுக்கூடாக உங்களை ஆண்டவர் வழிநடத்தி அவைகளை எதிர் கொண்டு வெற்றிசிறக்கச் செய்கிறார்.

நமக்கு மீட்பு உண்டாவதற்காக, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எல்லாப் பாடுகளையும் பொறுமையோடு ஏற்றுக்கொண்டார். சிலுவையை மகிழ்ச்சியோடு சுமந்து வெற்றி சிறந்தார். யோபு என்ற பக்தனுக்கு பயங்கரமான நோய், சோதனைகள் அதாவது அவனுடைய பிள்ளைகள் அனைவரும் இறந்து போய்விட்டார்கள், அவனுடைய சொத்துக்கள் அனைத்தையும் இழந்து போனான். அவனுடைய கொடிய நோயின் நிமித்தமாக அவனுடைய மனைவியும் நீர் தேவனைத் தூஷித்து செத்துப்போ என்று என்றாள். (யோபு 1ம்2ம் அதிகாரங்களில் எழுதப்பட்டுள்ளது) இப்டியான சூழ்நிலைகளின் மத்தியிலும் அவன் என்ன சொன்னான் தெரியுமா? "அவர் என்னைச் சோதித்த பின் நான் பொன்னாக விளங்குவேன்" என்றார். (யோபு23:10)

அருமையான சகோதரனே! சகோதரியே! உனது வாழ்வில் மீண்டும் மீண்டும் பாடுகளும், வேதனைகளும் பெருகுகின்றதா? கவலைப்படாதீர்கள். இவைகள் எல்லாம் நீங்கள் தேவனுடைய வல்லமையை அறிந்து கொள்ளவும் அவரிலே பெலப்படவுமே என்பதை மறந்து போகாதீர்கள்! கூட்டுக்குள் இருந்து வெளிவர எவ்வளவு பிரயாசங்களை, வேதனைகளை, தடைகளை எல்லாம் அந்தப் பட்டுப்பூச்சி அனுபவித்ததோ அதனால் அது உயரப்பறக்கும் நிலைக்கு வந்தது. அதே போல உன் வாழ்வும் உயரும். அதை ஆண்டவராகிய இயேசு தருவார்.

"இதோ, உன்னைப் புடமிட்டேன், ஆனாலும் வெள்ளியைப் போலல்ல, உபத்திரவத்தின் குகையிலே உன்னைத் தெரிந்து கொண்டேன்"(ஏசாயா48:10)

மேய்ப்பன் -



## பொன்னாங்கன்னி

உடல் குளிர்ச்சிக்கு சிறந்த மருந்து. தலைமுடி வளர்ச்சி அடையும். தோலின் நிறம் மாற்றமடைந்து பொன்னிறமாக மாறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்தக் களிப்பு!

ஒரு பக்தன் பிரயாணம் செய்த கப்பல் உடைந்து பிரயாணிகள் யாவரும் மரித்தனர். அந்த பக்தன் மட்டும் தப்பி, தூரத்தில் உள்ள சிறிய தீவில் கரை ஒதுங்கினார். ஜனங்களே இல்லாத, முள்புதர் நிறைந்த, பயங்கரமான தீவு அது! கப்பலில் மிதந்து வந்த கட்டைகளால் கூடாரம் அமைத்து, இரவும் பகலும் கண்ணீரோடு தன்னை சொந்த ஊருக்கு செல்லும்படி ஜெபித்து வந்தார். பல வாரங்கள் உருண்டன!

ஒரு நாள் கடல்கரையில் மீன் பிடிக்கச் சென்ற போது தூரத்திலுள்ள தன் கூடாரம் திடீரென்று தீப்பிடித்து எரிவதைக் கண்டார். ஓடிப்போய் தீயை அணைக்க எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. தன் ஒரே புகலிடம் அழிந்ததை நினைத்து அழுதார், புலம்பினார். அவரது துக்கம் அளவிடப்பட முடியாததாக இருந்தது. கர்த்தர் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாற்றுகிறவர். கூடாரம் பற்றியெரிந்து கொண்டிருக்கிற நெருப்பைத் தூரத்தில் இருந்த கப்பல் ஒன்று அவன் இருந்த அந்தத் தீவுக்கு வந்து அந்த பக்தனைக் காப்பாற்றியது. அப்பொழுதுதான் கர்த்தர் ஏன் தன் கூடாரத்தை தீப்பிடிக்க அனுமதித்தார் என்பதை அந்த பக்தன் அறிந்து மனதாரக் கர்த்தரைத் துதித்தான்.

அநேகர் தம்முடைய வாழ்விலே தோன்றும் பலவிதமான தாக்கங்களின் நிமித்தமாக கடவுளை ஏசுகிறார்கள். ஏன் இப்படி எல்லாம் எனக்கு, எனது குடும்பத்திற்கு ஏற்படுகிறது என மன வேதனை அடைகிறார்கள்.

அன்பான சகோதரனே! சகோதரியே! உங்களுக்கு வரும் எல்லாத் துக்கங்களிலும் மறைந்திருக்கும் ஆசீர்வாதங்கள் உண்டு! உங்களுக்கு ஏற்படும் எல்லாக் கஷ்டங்களையும், நஷ்டங்களையும் ஆண்டவராகிய இயேசு உங்களுக்கு மேன்மையாக மாற்றுவார்.

பரிசுத்த வேதாகமத்தில் சங்கீதம் 30:11ல் "என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப்பண்ணினீர் மகிழ்ச்சியென்னும் கட்டினால் என்னை இடைகட்டினீர்". உங்கள் வாழ்வின் புலம்பலை ஆனந்தக்களிப்பாக மாற்றுகிறவர் ஒருவர் உண்டு. அவர்தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து.
சங்கீதம் 30:5ல் "அவருடைய தயவோ நீடிய வாழ்வு; சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்". ஆண்டவராகிய இயேசு உன் வாழ்வின் அழுகையை களிப்பாக மாற்றுவார். அவருக்கு உன் இருதயத்தைக் கொடு. அவர் உன் வாழ்வை ஆனந்தக் களிப்பாக மாற்றுவார்.

மேய்ப்பன் -

**அரண்டவனுக்கு**

ஒரு கல்லறைத் தோட்டத்தினுள் ஒரு மாமரம் நின்றது. இரு நண்பர்கள் மாம்பழம் திருடினார்கள். இரு பழங்கள் கல்லறைத் தோட்டத்தின் சுவருக்கு வெளியே விழுந்தது. அவைகளை விட்டு விட்டு இருவரும் கல்லறையின் உள்ளிருந்து பழங்களைப் பங்கு வைத்தனர். கல்லறைக் காவலாளியும் அவன் மனைவியும் சுவருக்கு அந்தப்பக்கமாக வந்தபோது வெளியில் கிடந்த மாம்பழத்தைப் பார்த்த போது எனக்கொன்று உனக்கொன்று என்று இரைந்து கத்தினர். கல்லறைப் பேய்தான் இருவரையும் பங்குபோட்டு உயிரை எடுக்கப் போவதாக எண்ணிய திருடர்கள் இருவரும் மாம்பழத்தைப் போட்டுவிட்டு உயிர் தப்பினோம் என்று ஓடிப்போனார்கள்.


அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய். கள்ளவழி மனச்சாட்சியை உறுத்தும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கவிதை முற்றம்

# முள்வேலி

நம்மைத் தடுக்கும் முள் வேலி
வெறுமையாய்ப் பயங்கரமாய்த் தோன்றுகிறது
குளிர் காலத்தில் இலை உதிர்ந்து முள் மாத்திரம் இருக்கும்
அதன் முள்கள் நம்மைக் கிழித்துப்
புண்படுத்தும் போலிருக்கிறது
வசந்த காலம் வரும்போது ஆரோனின் கோல்போல்
ஒவ்வொரு இலையும் துளிர்த்துப் பச்சிலைகளால் நிறையும்
முன்பு முள்மட்டும் இருந்த இடம் இப்பொழுது
பசு மெத்தைப்போல் ஆகும்.
நம்மைக் கவலைக்குள்ளாக்கும் வருத்தங்கள்
அநேக தீமையினின்று நம் ஆன்மாவைக் காக்கும்.
நாம் வழி தவறிச் செல்லாதவாறு
தடுக்கும் அருளின் வடிவங்கள் அவைகளே.
குழியில் விழாதவாறு நம்மைக் காக்க
மெல்லிய மலர்களாகிய வேலிபோதாது.
முள் வேலி போன்ற தடைகளே
நம்மைத் தடுத்து நிறுத்தக்கூடும்
நாம் இந்த முள்வேலியில் மோதிக்
காயப்பட்டு, நம்முடலினின்றும் இரத்தம் வடியும்போது,
தேவன் நமக்காக ஏற்படுத்திய இத் தடைகள்
மிகக் கடினமாகவே தோன்றும்
மறைவாயுள்ள குழிகளில் நாம் விழாதவாறு
கர்த்தரால் பாதுகாப்பமைக்கப்பட்ட
பாதையில் செல்லும்போது
அவருடைய அறிவையும் இரக்கத்தையும் எண்ணி
நாம் அழகிய துதிப்பாடல்கள் பாடுவோம்.



# மலரல்ல முள்

பாதை மிகக்கடினமாம்
பாதை செங்குத்தாயேறுதே
மலரில்லை எங்கும் முட்களே,
உயர் வானமும் கறுத்துள்ளதே
ஒருவர் என்கரம் பற்றினார், என் பாதை
இருவருக்கும் இனிதாயிற்றே.

சிலுவை மிகப்பெரியதென்றேன்
குருசின் பாரம்தாங்கா தென்முதுகு
முரடாயது கனமாயுள்ளதே
கருத்துக் கொண்டுதவ யாருமிலர்
ஒருவர்குனிந்து என் கரம்பற்றினார்; அவர்
தெரிவேன், கருத்துடன் புரிவேன்
நானென்றார்.

ஏன் முறுமுறுப்புப் பெருமூச்சுடன்
என்றும் சிலுவைதனைச் சுமக்கிறோம்
எம்பாதை சீக்கிரமேதான்
நாம் விரும்புமிடத்திலேயே முடியும்.
நாதன் அவருடன் என்றும் நாம் நடந்திடின்,
நாமெடுக்கும் ஒவ்வோரடியும் இனிதாகுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுயாதீன மெதடிஸ்த தமிழ் திருச்சபை- மிசிசாகா**
ஞாயிறு ஆராதனை
வாலிபர் ஆங்கில ஆராதனை காலை 9:00 மணி
தமிழ் ஆராதனை காலை 10:30 மணி
ஓய்வுநாட்பாடசாலை காலை 10:30 மணி
வேதப்படிப்பு வெள்ளி மாலை 7:30 மணி
உபவாச ஜெபம் மாதத்தின் 1வது 3வது சனி காலை 10:30 மணி
விழிப்பிரவு ஜெபம் மாதத்தின் கடைசி வெள்ளி இரவு 9:00 மணி
#41-3045 Southcreek Road, Mississauga,Ont
(DUNDAS & HWY427)
ஆவிக்குரிய தேவசெய்திகளை எமது இணையதளத்தில் கேட்டு பயனடையுங்கள்
www.fmtcm.ca

**விசுவாசிகளின் எழுப்புதல் தமிழ் திருச்சபை- பிரம்டன்**
ஞாயிறு ஆராதனை
தமிழ் ஆராதனை மாலை 3:00 மணி
ஓய்வுநாட்பாடசாலை மாலை 3:00 மணி
உபவாச ஜெபம் பிரதி சனி காலை 10:30 மணி
வேதப்படிப்பு சனி காலை 10:30 மணி
விழிப்பிரவு ஜெபம் மாதத்தின் கடைசி வெள்ளி இரவு10:30 மணி
355,Howden Blvd, Brampton, Ont
(DIXIE & QUEEN)
தொடர்புகளுக்கு: போதகர் ஜோண் பாஸ்கரன் (289) 937- 1954
Email:brtamilchurch@gmail.com

**விசுவாசிகளின் எழுப்புதல் தமிழ் திருச்சபை- மல்வன்**
ஞாயிறு ஆராதனை
தமிழ் ஆராதனை மாலை 5:00 மணி
ஓய்வுநாட்பாடசாலை மாலை 5:00 மணி
2, Morningview Trail, Scarborough, Ont
(MORNINGSIDE & MORNINGVIEW TRAIL)

**விசுவாசிகளின் எழுப்புதல் தமிழ் திருச்சபை- மார்க்கம்**
ஞாயிறு ஆராதனை
தமிழ் ஆராதனை காலை 9:00 மணி
400, Passmore Avenue, Scarborough, Ont
(MARKHAM & PASSMORE AVE)

**ஜெபதேவைகள், ஆவிக்குரிய தேவ ஆலோசனைகள், மேலும் விபரங்களுக்கு அழையுங்கள்**
*Rev.Sritharan Jeyarajah*
**(905) 232-3910 (905)306 – 1321 (416– 697 – 1321)**
Email:fmtchurch@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித்தனியாக கற்பித்தல்

அமைப்பது
தன்னம்பிக்கை - ஒழுக்கம் - வெற்றி

ஒரு நேரம் ஒரு பிள்ளையுடன்



ஆரம்ப வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை
மணித்தியாலக் கட்டணம் இல்லை
மாதம் 20 டாலர்கள் மட்டுமே

பாடங்கள்:
கணிதம்
விஞ்ஞானம்
மொழி
சரித்திரம்



**வேறு சேவைகளின் உள்ளடக்கம்**

கணணித் திறமைகள்
ஆங்கில இரண்டாம் மொழி
பணத்தை நிர்வகித்தல்
குடும்ப ஆலோசனை
திருமணதிற்கு முன்னானதும்
திருமணத்துக்கான ஆலோசனைகளும்

கனடாவிற்கு புதிதாக வந்தவர்களுக்கான சேவைகள்

தகவல் மையம்
வேலை பெறுவது எப்படி?
எங்கு செல்ல வேண்டும்?
என்ன செய்ய வேண்டும்?
கல்வித் தராதரப் பத்திரம் தகுதிப்படுத்துதல்
போன்ற அனைத்து சேவைகளும்.

**திங்கள், வியாழன் மாலை 6மணிமுதல் 8மணிவரை**
**உடன் அழைத்து பதிவு செய்யுங்கள்**

வகுப்பு நடைபெறும் இடம்
**3045 Southcreek Rd, Unit 41**
**Mississauga, ON L4X 2X6**
**Contact us today**
**Office (905) 232 - 3910 Cell (416) 697 - 1321**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org